بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

இதழ் 45

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

05 ரபீவுல் ஸானி 1443 ஹிஜ்ரி கமரி 11 நுபுவ்வத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 11 நவம்பர் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَمۡشِ فِى الۡاَرۡضِ مَرَحًا ۚ اِنَّكَ لَنۡ تَخۡرِقَ الۡاَرۡضَ وَلَنۡ تَبۡلُغَ الۡجِبَالَ طُوۡلًا

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## ஆணவம் கொள்வதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள் என்று நான் எனது ஜமாஅத்திற்கு அறிவுரை செய்கின்றேன். ஏனென்றால் நமது கம்பீரமிக்க இறைவனின் பார்வையில் அது மிகவும் வெறுக்கத்தக்கதாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நீங்கள் ஆணவம் கொள்வதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள் என்று நான் எனது ஜமாஅத்திற்கு அறிவுரை செய்கின்றேன். ஏனென்றால் நமது கம்பீரமிக்க இறைவனின் பார்வையில் அது மிகவும் வெறுக்கத்தக்கதாகும். ஆவணம் என்றால் என்ன? என்பதை நீங்கள் ஒருவேளை அறியாமல் இருக்கக்கூடும். என்னிடமிருந்து அதனை புரிந்து கொள்ளுங்கள். நான் இறைவனின் ஆன்மாவைக் கொண்டு பேசுகின்றேன். தனது சகோதரனை விட தான் அறிஞர் என்பதாலோ அல்லது பெரிய புத்திசாலி என்பதாலோ அல்லது பெரிய திறமைசாலி என்பதாலோ தனது சகோதரனை இழிவாக கருதும் ஒவ்வொரு நபரும் ஆணவம் கொண்டவர் ஆவார். ஏனென்றால் அறிவு மற்றும் ஞானத்தின் ஊற்றாக அவர் இறைவனை கருதவில்லை. மேலும் தம்மை ஒரு பொருட்டாக அவர் கருதிக் கொள்கின்றார். அவரை பைத்தியமாக்கி விடுவதற்கும், மேலும் அவர் அற்பமாக கருதிய நபருக்கு அவரை விட சிறந்த அறிவையும், ஞானத்தையும், திறமையையும் வழங்குவதற்கும் இறைவன் வல்லமை படைத்தவன் இல்லையா? அதேபோன்று தமது செல்வத்தையும் அல்லது கௌரவத்தையும் மிகப் பெரிதாக கருதி தனது சகோதரரை ஏளனமாக கருதுபவரும் ஆணவம் கொண்டவர் ஆவார். ஏனென்றால் தனக்கு இறைவனே கண்ணியத்தையும், பெருமையையும் வழங்கியுள்ளான் என்பதை அவர் மறந்து விட்டார். அத்தகைய நபர் குருடர் ஆவார். ஏனென்றால் அந்த இறைவன் அவர் மீது ஒரு சுழற்சியை இறக்குவதற்கு வல்லமை படைத்துள்ளான் என்பதை அவர் அறிவதில்லை. அதன் மூலம் அவர் ஒரு நொடியில் اَسۡفَلَ السّٰفِلِیۡنَ என்ற வட்டத்தில் சென்று வீழ்ந்து விடுவார். மேலும் தமது எந்த சகோதரரை அவர் இழிவானவராக கருதி இருந்தாரோ அவருக்கு இ வரை விடச் சிறந்த செல்வத்தை இறைவன் வழங்கி விடுவான். அதேபோன்று தமது உடல் ஆரோக்கியத்தின் மீது பெரும் கொள்கின்ற நபரும் அல்லது தமது அழகு, உயர்வு, ஆற்றல், வலிமை

(தொடர்ச்சி 10 வது பக்கம்.....)

## நபிமொழி

**நான் (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)) உங்களின் உயிரை விடவும் உங்களுக்கு நேசத்திற்குரியவனாக ஆகிவிடாத வரை (உங்களின்) ஈமான் முழுமையடைய முடியாது**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனது உயிரை தவிர்த்து ஏனைய அனைத்து விஷயங்களை விடவும் மிகவும் விருப்பத்திற்குரியவர் ஆவீர்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இல்லை! எனது உயிர் எந்த இறைவனின் கரத்தில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! உங்களுக்கு நான் உங்களின் உயிரை விடவும் நேசத்திற்குரியவனாக ஆகிவிடாத வரை (ஈமான் முழுமை அடையாது) என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! தற்போது தாங்கள் எனக்கு எனது உயிரை விடவும் மிகவும் நேசத்திற்குரியவர் ஆவீர்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். (அதற்கு) ஆம்! உமரே! தற்போது உமது ஈமான் முழுமையடைந்து விட்டது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமான்,
باب كَيْفَ كَانَتْ يَمِيْنُ النَّبِيِّ
صلى الله عليه وسلم)

## பிஸ்மில்லாஹ் ஓதி முஸ்லிம்கள் தமது அனைத்து பணிகளையும் தொடங்க வேண்டும் என்பதற்குரிய நடைமுறையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பிஸ்மில்லாஹ் ஓதுவதன் மேன்மை தொடர்பாக கூறுகின்றார்கள்:

பிஸ்மில்லாஹ் ஓதுவதன் மேன்மையின் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறப்பான அழுத்தம் கொடுத்துள்ளார்கள்.

كُلُّ اَمْرٍ ذِيْ بَالٍ لَايُبْدَأُ فِيْهِ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَقْطَعُ என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அர்பயீன் ஹாபிழ் அப்துல் காதிர் அன் அபீ ஹுரைரா)

பொருள்: பிஸ்மில்லாஹ் ஓதி தொடங்கப்படாத எந்தவொரு பெரிய பணியும் அருளற்றதாக இருக்கும். எனவே முஸ்லிம்கள் தமது அனைத்து பணிகளையும் பிஸ்மில்லாஹ் ஓதி தொடங்க வேண்டும் என்பதற்குரிய நடைமுறையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள்.

اُغْلُقْ بَابَكَ وَاذْكُرِ اسْمَ اللّٰهِ عَزَّوَجَلَّ فَاِنَّ الشَّيْطٰنَ
لَايَفْتَحُ بَابًا مُغْلَقًا وَاطْفِئْ مِصْبَاحَكَ
وَاذْكُرِ اسْمَ اللّٰهِ وَخَمِّرْ اِنَاءَكَ وَلَوْ بِعُوْدٍ
تعرضه وَ اذْكُرِ اسْمَ اللّٰهِ وَاَوْكِ سِقَاءَكَ
وَاذْكُرِ اسْمَ اللّٰهِ عَزَّوَجَلَّ

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 3 பக்கம் 319)

உங்களது வீட்டின் வாசலை அடைக்கும்போதும் பிஸ்மில்லாஹ் ஓதிக் கொள்ளுங்கள். விளக்கை அணைக்கும்போதும், பாத்திரத்தை மூடும்போதும், உங்களது தண்ணீர் பையின் வாயை கட்டும்போதும், அதேபோன்று மனைவிக்கு அருகில் செல்லும்போதும், வுளூ செய்யும்போதும், உணவு உண்ணும்போதும், கழிவறைக்குள் நுழைவதற்கு முன்பும், ஆடை அணியும்போதும் பிஸ்மில்லாஹ் ஓதுவது ஏனைய ஹதீஸ்களிலிருந்து நிரூபணமாகின்றது.

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்களின் ஒரு கடிதத்தைப் பற்றிய குறிப்பு இடம்

(தொடர்ச்சி 10 வது பக்கம்.....)

## இந்த இதழில்

*திருக்குர்ஆன்*
*நபிமொழி*
*மல்ஃபூஸாத்*
*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*
*குத்பா பேருரை 08 அக்டோபர் 2021 (முழுவதுமாக)*
*கேள்வி–பதில்: ஹுஸூர் (அய்ய)*
*ஹுஸூர் (அய்ய) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் 2013*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்று வெற்றி மற்றும் நீதியை ஒருங்கே கொண்ட அன்னாருக்கு சமமான வெற்றியாளரும், வீரரும் இன்று வரை உலக வரலாற்றில் கிடைக்கவில்லை**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கிடைத்த மாபெரும் வெற்றிகளுக்கான காரண, காரியங்கள்**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தின் விளக்கம்**

**இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பு மற்றும் ஜனாஸா காயிப் தொழுகை**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 அக்டோபர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அஹா மாதம் 08 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தின் வெற்றிகளைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்றிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதக்கூடிய வரலாற்று ஆசியரான அல்லாமா ஷிப்லி நுஃமானி அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வெற்றிகள் மற்றும் அதற்கான காரண, காரணிகளை குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்: சில பாலைவன வாசிகள் எவ்வாறு பாரசீகம் மற்றும் ரோமானியர்களின் ஆட்சி அரியணையை புரட்டிப் போட்டார்கள்? என்ற கேள்வி ஒரு வரலாற்று ஆசியரின் உள்ளத்தில் உடனடியாக எழலாம்.

இது உலக வரலாற்றின் ஒரு விதிவிலக்கான சம்பவமாக இருந்ததா? இறுதியில் இதற்கு காரணங்கள் என்னவாக இருந்தன? இந்த வெற்றிகளை அலெக்ஸ்சாண்டர் மற்றும் சங்கீஸ்கானின் வெற்றிகளுடன் ஒப்பிட முடியுமா? என்னவெல்லாம் நடைபெற்றனவோ அவற்றில் கிலாஃபத் ஆட்சியாளர்களுக்கு எவ்வளவு பங்கு இருந்தது?

அன்னார் கூறுகின்றார்கள்: நாம் இந்த சந்தர்ப்பத்தில் இதே கேள்விகளுக்கு பதிலளிக்க விரும்புகின்றோம். ஆனால் அதற்கு முன்பு ஃபாரூக்கி வெற்றிகளின் பரப்பளவு மற்றும் அதன் நகர்புற எல்லைகள் என்னவாக இருந்தன? என்பதை சுருக்கமாக கூறி விடுவது அவசியமாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெற்றி கொண்ட நாடுகளின் மொத்த பரப்பளவு 22,51,030 சதுர மைல் ஆகும். மக்காவிலிருந்து வடக்கில் 1036 மைல்களும், கிழக்கில் 1087 மைல்களும், தெற்கில் 483 மைல்களும் இருந்தன. இந்த அனைத்து வெற்றிகளும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வெற்றிகளே ஆகும். இவை அனைத்தின் காலகட்டங்களும் பத்து ஆண்டுகளுக்கு சற்று கூடுதலாகும்.

நான் வரலாற்றின் அடிப்படையில் இதன் பின்னணியை கூற இருக்கின்றேன். ஏனென்றால் இந்த வெற்றிகளைப் புரிந்து கொள்வதற்கு அந்த விஷயங்களை அறிந்து கொள்வதும் அவசியமாகும். எவ்வாறிருப்பினும் இந்த வெற்றிகள் குறித்து ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் என்ன கருத்துகள் கொண்டுள்ளனர்? என்பதை நான் எடுத்துரைக்கின்றேன்.

முதல் கேள்விக்குரிய பதிலாக ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் இதனை வழங்கியுள்ளனர். அதாவது அப்போது பாரசீகம் மற்றும் ரோம் ஆகிய இரண்டு பேரரசுகளும் வெற்றியின் சிகரத்திலிருந்து வீழ்ந்திருந்தன. அவர்கள் உச்சத்தை அடைந்திருந்தனர். அவர்கள் வீழ்ச்சி பெற வேண்டியதிருந்தது. அது இயற்கை சட்டமாகும்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: பாரசீகர்களிடம் குஸ்ரு பர்வேஸிற்குப் பிறகு அரசாட்சியின் அமைப்பு முற்றிலும் சீர்குலைந்து விட்டது. ஏனென்றால் அரசாங்கத்தை நிர்வகிக்கக் கூடிய எந்தவொரு தகுதியான நபரும் இருந்திருக்கவில்லை. அரசவையின் தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையில் சதித்திட்டங்கள் துவங்கி இருந்தன. இந்த சதித் திட்டங்களின் காரணமாக அரசாட்சிகள் மாறிக் கொண்டே இருந்தன. எனவே 3, 4 வருடங்களிலேயே அனான் அரசாங்கம் 6, 7 ஆட்சியாளர்களின் கரங்களில் சென்று விட்டது.

ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அதாவது இதற்கு மற்றொரு காரணமும் உள்ளது. நவ்ஷேர்வானுக்கு சற்று முன்பு முஸ்தகியா பிரிவின் தாக்கம் அதிகமாகி இருந்தது. அது மார்க்கமற்ற மற்றும் இறைமறுப்பு கொள்கையின் பக்கம் சாய்ந்திருந்தது. இந்தப் பிரிவின் கொள்கைகள் இவ்வாறு அமைந்திருந்தன. அதாவது மக்களின் உள்ளங்களிலிருந்த பேராசைகள் மற்றும் ஏனைய கருத்து வேறுபாடுகளை அகற்ற வேண்டும். மேலும் பெண்கள் உட்பட அனைத்து சொத்துக்களையும் பொதுச் சொத்தாக ஆக்கிவிட வேண்டும். அதாவது பெண்களுக்கு எந்த கண்ணியமும் இல்லாமல் இருந்தது. மார்க்கம் தூய்மையாகி விட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த சிந்தனை இருந்தது. இதுவே கொள்கையாக இருந்தது. அவர்களின் பார்வையிலும் வேறு சிலரின் பார்வையிலும் இது சமூக இயக்கமாக இருந்தது. அதன் நோக்கம் ஜெராஸ்ட்ரிய மார்க்கத்தை தூய்மைப்படுத்துவதாக இருந்தது.

நவ்ஷேர்வான் பிரிவினர்கள் வாளின் மூலமாக இந்த மார்க்கத்தை வீழ்த்தி இருந்தனர். ஆனால் அவர்களால் முற்றிலும் அதனை அழிக்க முடியவில்லை. இஸ்லாத்தின் பாதம் பாரசீகத்தில் பட்டபோது அந்த பிரிவைச் சார்ந்த மக்கள் முஸ்லிம்களை தங்களது அடைக்கலமாக கருதினர். அவர்கள் (முஸ்லிம்கள்) எந்தவொரு மார்க்கம் மற்றும் கொள்கைகளை அபகரிக்க மாட்டார்கள் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. இதுவே ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களின் பார்வையாகும்.

அடுத்து அன்னார் எழுதுகின்றார்கள்: கிறிஸ்துவர்களில் எந்தவொரு அரசாங்கத்திலும் அடைக்கலம் கிடைக்கப் பெறாத நஸ்தூரி பிரிவு இஸ்லாத்தின் நிழலில் வந்து எதிரிகளின் அநீதியிலிருந்து தப்பித்துக் கொண்டது. இவ்வாறு இரண்டு பெரும் பிரிவுகளின் அனுதாபமும், உதவியும் இலவசமாக முஸ்லிம்களின் கரங்களுக்கு வந்தது. ரோமானிய அரசாங்கம் சுயமே பலவீனமாக இருந்தது. அத்துடன் கிறிஸ்துவர்களின் உள்ளார்ந்த கருத்து வேறுபாடுகளின் தாக்கமும் அந்த நாட்களில் அதிகமாக இருந்தது. அந்த நேரத்தில் அரசாங்க அமைப்பில் மார்க்கத்தின் தலையீடும் இருந்தது. எனவே இந்த கருத்து வேறுபாட்டின் தாக்கம் மார்க்க எண்ணங்களுக்கு உட்பட்டதாக இருக்கவில்லை. இன்னும் கூறப்போனால் இதன் காரணமாக அரசாங்கம் சுயமே பலவீனம் அடைந்திருந்தது.

அல்லாமா அவர்கள் இந்த கருத்தை ரத்து செய்தவாறு அதாவது ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களின் கருத்தை மறுத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த பதில் உண்மை சம்பவங்களுடன் தொடர்பற்றதாகும். ஆனால் உண்மைக்கு எதிராக சுய கருத்துகளின் அடிப்படையில் விஷயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இது ஐரோப்பியர்களின் சிறப்பு தொனியாகும். சந்தேகத்திற்கு இடமின்றி அந்த நேரத்தில் பாரசீக மற்றும் ரோமானிய பேரரசுகள் தங்களின் அசல் உயரத்தில் இருக்கவில்லை. ஆனால் அதன் விளைவு இந்த அளவே ஏற்பட்டிருக்க முடியும். அதாவது அவர்கள் வலிமை வாய்ந்த அரசாங்கத்தை எதிர்த்து போரிட முடியாதவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால் அரபுகளைப் போன்ற தளவாடங்களற்ற சமுதாயத்துடன் போரிட்டு தூள் தூளாகி போய்விடும் நிலையில் அவர்கள் பலவீனமாக இருக்கவில்லை. ரோமானியர்கள் மற்றும் பாரசீகர்கள் போர்க் கலைகளில் நிபுணர்களாக இருந்தார்கள்.

யுனானியில் குறிப்பாக போர்களின் சட்டங்களைப் பற்றிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவை இன்று வரை நிலைபெற்றுள்ளன. ரோமானியர்களிடம் ஒரு நீண்ட காலம் வரை அதன்படி செயல் நடைமுறை இருந்து வந்துள்ளது. அத்துடன் விநியோக சங்கிலியும் இருந்தது.

ஏராளமான ஏற்பாடுகள் இருந்தன. பலவகையான போர் ஆயுதங்கள் இருந்தன. பல்வேறு தரப்பட்ட பொருட்கள் இருந்தன. படைகளின் மிகுதியில் குறைவு ஏற்பட்டிருக்கவில்லை. எல்லாவற்றையும் விட அதிகமாக எந்தவொரு நாட்டின் மீதும் போர் தொடுத்து செல்ல வேண்டியதற்கான சூழல் இருக்கவில்லை. மாறாக, தமது நாட்டில், தமது கோட்டைகளில், தமது முகாம்களில் இருந்து கொண்டு தமது நாட்டை பாதுகாக்க வேண்டியதிருந்தது. முஸ்லிம்களின் தாக்குதலுக்கு சற்று முன்னதாகவே ஈரானின் மகிமை மற்றும் சிறப்பின் உறைவிடமாக இருந்த குஸ்ரு பர்வேஸின் காலத்தில் ரோமானிய பேரரசர் ஈமானின் மீது தாக்குதல் தொடுத்திருந்தார். ஒவ்வொரு அடியிலும் வெற்றிகளைப் பெற்றவாறு அஸ்ஃபஹான் என்ற இடத்தை அடைந்திருந்தார். ஈரானியர்களால் பறிக்கப்பட்ட சிரியாவின் அந்த மாநிலத்தை திரும்பப் பெற்றுக் கொண்டார். மேலும் புதிதாக அங்கு ஆட்சி அமைப்பை நிர்வகித்தார்.

குஸ்ரு பர்வேஸ் வரை ஈரானில் ஆட்சி மிகவும் கம்பீரமாக இருந்து வந்தது என்பது பொதுவாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. குஸ்ரு பர்வேஸின் மரணத்திலிருந்து இஸ்லாமிய படையின் தாக்குதல் வரை இடைப்பட்ட காலகட்டம் வெறும் 3, 4 வருடங்களாகவே இருந்தன. இந்த அளவிற்கு குறுகிய காலகட்டத்தில் அந்த பழமை வாய்ந்த அரசாங்கம் எந்த அளவிற்கு பலவீனமானதாக இருந்திருக்கும். நிச்சயமாக ஆட்சி அரசாங்கம் மாறிக் கொண்டே இருந்ததால் அமைப்பில் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அரசாங்கத்தின் அங்கமாகிய அதாவது கருவூலம், படை மற்றும் ஏனைய விஷயங்களில் எந்தக் குறைபாடும் ஏற்பட்டிருக்கவில்லை. எனவே யஸ்தகர்த் ஆட்சியில் அமர்ந்தபோது அரசவை ஊழியர்கள் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தினர். அப்போது உடனடியாக புதிதாக அரசாங்கம் நிலைபெற்று விட்டது. முஸ்தகியா பிரிவு ஈரானில் இருந்தபோதிலும் முழு வரலாற்றிலும் எந்தவொரு வகையான உதவியும் அவரிடமிருந்து கிடைத்ததாக வரலாற்றிலிருந்து நமக்கு தெரியவில்லை. அதாவது முஸ்லிம்களுக்கு எந்தவோர் உதவியும் கிடைக்கவில்லை. அதேபோன்று நஸ்தூரி பிரிவின் எந்தவொரு உதவி குறித்தும் நமக்கு தகவல் இல்லை.

நஸ்தூரி பிரிவு என்பது கிறிஸ்துவர்களின் ஒரு பிரிவாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடத்தில் இறைத்தன்மையும், மனிதத்தன்மையும் இரண்டும் தனித்தனியாக காணப்பட்டிருந்தன என்பது அதன் கொள்கை ஆகும். கிறிஸ்துவர்களின் மார்க்க கருத்து வேறுபாடுகளின் தாக்கம் பற்றியும் ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள் எங்கேயும் எடுத்துரைக்கவில்லை.

தற்போது அரேபியர்களின் நிலையைப் பாருங்கள். எகிப்திலும், ஈரானிலும், ரோமிலும் போர்களில் அவர்களின் அனைத்துப் படைகளும் மும்முரமாக இருந்தன. அதன் ஒட்டுமொத்த எண்ணிக்கை ஒருபோதும் ஒரு லட்சத்தை கூட எட்டியிருக்கவில்லை. போர் கலைகளில் அவர்களின் அறிவின் நிலை இவ்வாறாக இருந்தது. அரபிகள் தஃபியா என்ற வழிமுறைக்கேற்ப அணிவகுத்து நின்ற முதல் போராக யர்மூக் போர் இருந்தது. போரின் நேரத்தில் படைத்தளபதி அல்லது படையை தலைமை தாங்கும் அரசர் அனைத்து படைகளுக்கு மத்தியிலும் நிற்பார். இதனை தஃபியா ஒழுங்குமுறை என்று கூறுவார்கள். ஹவ்த், ஸிரா, சில்தா, ஜவ்ஷன் (இவை இரும்பு அல்லது எஃகு போன்வற்றால் ஆன போர்க்கவசங்கள் ஆகும்), பக்தர், சார்அய்னா (என்பது மார்பு, முதுகு, இரண்டு தொடைகள் ஆகியவற்றில் கட்டப்படும் நான்கு எஃகு தகடுகள் ஆகும்) இவை அனைத்தும் அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்களாக இருந்தன. மேலும் அவர்களிடம் இரும்பு கையுறைகளும் இருந்தன.

அடுத்து ஈரானிய போர் வீரர்கள் போரின்போது கண்டிப்பாக அணிந்திருந்த காலுறைகளும் இருந்தன. இவற்றில் அரேபியர்களிடம் ஸிரா எனும் ஆயுதம் மட்டுமே இருந்தது. அதுவும் பெரும்பாலும் தோலினால் தயாரிக்கப்பட்டிருந்தது. அவர்களின் (ஈரானியர்களின்) அனைத்து பாதுகாப்பு தளவாடங்களும் இரும்பால் இருந்தன. அரேபியர்களிடம் சற்று ஏதாவதொரு ஆயுதம் இருந்திருந்தாலும் கூட அது தோலால் தயாரிக்கப்பட்டிருந்தது. இரும்பால் ஆன தடிகளுக்கு பகரமாக மரக்குச்சிகள் அவர்களிடத்தில் இருந்தன. குரஸ் மற்றும் கமந்த் போன்ற போர்த் தளவாடங்களை பற்றி அரேபியர்கள் முற்றிலும் அறியாதவர்களாக இருந்தனர். குரஸ் என்பது ஓர் ஆயுதத்தின் பெயராகும். அது மேலே உருண்டையாகவும், தடிமனாகவும் இருந்தது. அதன் கீழ்ப்பகுதி தடிமனாக இருந்தது. அதைக் கொண்டு எதிரிகளின் தலைகளில் அடித்து வந்தனர். அரேபியர்களிடம் அம்புகள் இருந்தன. ஆனால் அது சிறிய அளவில்தான் இருந்தன. காதிஸிய்யா போரில் ஈரானியர்கள் முதன் முதலில் அரேபியர்களின் இந்த அம்புகளைப் பார்த்தபோது அவற்றை ஊசிகளாக கண்டனர்.

நூலாசிரியர் அல்லாமா ஸாஹிப் இதற்கான அசல் காரணிகளை எடுத்துரைத்தவாறு எழுதுகின்றார்கள்: அந்த நேரத்தில் இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களின் காரணமாக முஸ்லிம்களிடம் உணர்வும், உறுதியும், தைரியமும், உறுதிப்பாடும், வீரமும் உருவாகி இருந்தது. அதனை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதிக வலிமை வாய்ந்ததாகவும், அதிகப்படுத்தவும் செய்து விட்டார்கள். எம்மைப் பொறுத்தவரை அந்த முதல் கேள்விக்குரிய அசல் பதில் இது மட்டுமே ஆகும்.

ரோமானியர்கள் மற்றும் பாரசீகர்களின் அரசாங்கங்கள் மிகவும் உச்சத்திலிருந்த காலத்திலும் முஸ்லிம்களின் இந்த படையை எதிர்கொள்ள முடியாததாக இருந்தது. ஆயினும் அத்துடன் அவர்களுக்கு வேறு பொருட்களும் கிடைத்திருந்தன. அவை வெற்றிகளில் அல்ல. மாறாக, அரசாங்கத்தை நிலைநிறுத்துவதில் உதவியாக இருந்தன. அவற்றில் மிகவும் முதன்மையான விஷயம் முஸ்லிம்களின் நேர்மையும், நம்பகத்தன்மையும் ஆகும். வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளைச் சார்ந்த மக்கள் முஸ்லிம்களின் நேர்மை மற்றும் உண்மைக்கு எந்த அளவிற்கு நேசர்களாக ஆகி விட்டார்கள் என்றால் மார்க்க கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவர்களின் (முஸ்லிம்களின்) அரசாங்கத்தின் வீழ்ச்சியை விரும்பியிருக்கவில்லை. யர்மூக் போருக்கு முன்பாக முஸ்லிம்கள் சிரியாவின் மாவட்டங்களில் போருக்காக புறப்பட்டபோது இறைவன் உங்களை மீண்டும் இந்த நாட்டிற்கு கொண்டு வருவானாக என்று அனைத்து கிறிஸ்துவ குடிமக்களும் கூறினர். மேலும் யூதர்கள் தமது கரங்களில் தவ்ராத்தை ஏந்திக் கொண்டு, நாங்கள் உயிரோடு இருக்கும்போது இனி கைஸர் இங்கு வர முடியாது என்று கூறினர்.

சிரியாவிலும், எகிப்திலும் இருந்த ரோமானியர்களின் அரசாங்கம் முற்றிலும் அநீதியிழைக்கக்கூடிய அரசாங்கமாக இருந்தது. எனவே ரோமானியர்கள் ஆட்சி, அதிகாரம், படை பலம் ஆகியவற்றைக் கொண்டு போரிட்டனர். குடிமக்கள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கவில்லை. முஸ்லிம்கள் அவர்களின் அரசாங்கத்தின் வலிமையை உடைத்தபோது அவர்களுக்கு முன்னால் எந்தத் தடையும் இருக்கவில்லை. அதாவது குடிமக்கள் சார்பாக எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை. ஆனால் ஈரானின் நிலை இதிலிருந்து வேறுபட்டதாக இருந்தது. அங்கு அரசாங்கத்தின் கீழ் மிகப் பெரும் பெரும் தலைவர்கள் இருந்தனர். அவர்கள் பெரும் பெரும் மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களின் எஜமானராக இருந்தார்கள். அவர்கள் அரசாங்கத்திற்காக அல்லாமல் தங்களின் சுய நலனுக்காகவும், அதிகாரத்திற்காகவும் சண்டையிட்டு வந்தனர். இதன் காரணமாகவே அரசாங்கத்தை கைப்பற்றி வெற்றி பெற்ற பிறகும் கூட பாரசீகத்தில் ஒவ்வொரு அடியிலும் முஸ்லிம்களுக்கு எதிர்ப்பை சந்திக்க நேரிட்டது. ஆனால் அங்கும் பொது மக்கள் முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டு சென்றார்கள். எனவே வெற்றிக்குப் பிறகு அரசாங்கத்தை நிலைநிறுத்துவதற்கு அவர்களிடமிருந்து நிறைய உதவிகள் கிடைத்து வந்தன. அரசாங்கத்தை நிலைநிறுத்துவதில் உதவி கிடைத்திருந்தது.

மேலும் மற்றொரு பெரிய காரணமும் உள்ளது. அது என்னவென்றால், முஸ்லிம்களின் முதன் முதல் தாக்குதல் சிரியாவிலும், ஈராக்கிலும் நிகழ்ந்தது. இரண்டு இடங்களிலும் அதிகமாக அரேபியர்கள் குடியேறி இருந்தனர். சிரியாவில் டமாஸ்கஸைச் சேர்ந்த கஸ்ஸானி குடும்பத்தின் ஆட்சி இருந்தது. அது பெயரளவில் கைஸரின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஈராக்கில் லஹ்மி குடும்பத்தினர்கள் உள்ளபடியே நாட்டின் எஜமானராக இருந்தார்கள். ஒரு வகையில் கிஸ்ராவிற்கு கராஜ் வரியை செலுத்தி வந்தனர். அந்த அரேபியர்கள் கிறிஸ்துவர்களாக ஆகி இருந்ததன் காரணமாக முதலில் முஸ்லிம்களுடன் போரிட்டனர். ஆயினும் சமுதாய ஒற்றுமை உணர்வு வீணாகியிருக்கவில்லை. ஈராக்கின் பெரும் பெரும் தலைவர்கள் மிக விரைவாக முஸ்லிம்களாகி விட்டனர். முஸ்லிமாகி விட்ட பிறகு அவர்கள் முஸ்லிம்களின் உதவியாளர்களாக மாறி விட்டனர். இறுதியில் சிரியாவில் அரேபியர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். மேலும் ரோமானிய அரசாங்கத்திடமிருந்து விடுதலை பெற்றனர்.

அலெக்ஸாண்டர் மற்றும் சங்கீஸ்கான் போன்றோரின் பெயரை இங்கு நினைவு கூர்வது முற்றிலும் பொருத்தமற்றதாகும். சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள் இருவரும் பெரும் பெரும் வெற்றிகளை பெற்றுள்ளனர். ஆனால் எவ்வாறு பெற்றனர்? அநீதி, அக்கிரமம் மற்றும் படுகொலை ஆகியவற்றின் மூலமாக பெற்றனர். சங்கீஸ்கானின் நிலை பற்றி அனைவருக்கும் தெரியும். அலெக்ஸாண்டர் போன்றவர்களின் வெற்றிகளை ஒப்பிடாமல் இருப்பதே நல்லது. அலெக்ஸ்சாண்டரின் நிலை

என்னவாக இருந்ததென்றால் அவன் சிரியாவின் சூர் எனும் நகரத்தை வெற்றி கொண்டான். அப்போது அங்கிருந்த மக்கள் நீண்ட காலம் வரை ஒன்றுபட்டு போரிட்டு வந்தனர். எனவே அவர்கள் அனைவரையும் கொலை செய்ய அவன் கட்டளையிட்டான். நகரத்தின் வாசலிலும், சுவர்களிலும் ஓராயிரம் நகரவாசிகளின் தலைகள் தொங்க விடப்பட்டிருந்தன. அத்துடன் பெண்கள் உட்பட 30000 குடிமக்களை அடிமைகளாக ஆக்கி அவர்களை விற்று விட்டான். மேலும் பழைய குடிமக்களாகவும், விடுதலையை விரும்பக்கூடியவர்களாகவும் இருந்தவர்களில் ஒரு நபரைக் கூட அவன் உயிருடன் விட்டு வைக்கவில்லை. இன்னும் இதேபோன்ற இரக்கமற்ற அவனது செயல்பாடுகள் அதாவது அலெக்ஸாண்டரின் செயல்பாடுகள் வரலாற்றில் கிடைக்கின்றன. அவ்வாறிருக்க இஸ்லாமிய வெற்றிகளுடன் அவனது வெற்றிகளை எவ்வாறு ஒப்பிட முடியும்? அநீதி மற்றும் அக்கிரமத்தால் அரசாங்கம் நாசமாகி விடும் என்பது பொதுவான கூற்றாகும். அநீதி நிலைத்திருக்காது என்பது இந்த அடிப்படையில் சரியானதாகும். எனவே அலெக்ஸாண்டர் மற்றும் சங்கீஸ்கான் ஆகியோரின் அரசாங்கங்களும் நீண்ட காலம் நிலைபெற முடியவில்லை. ஆனால் உடனடி வெற்றிகளுக்கு இதுபோன்ற அநீதிகள் சில முறை உதவுகின்றன. இதன் காரணமாக நாடுகள் விரைவில் ஆளுமையின் கீழ் வந்து விடுகின்றன. ஏனென்றால் குடிமக்களின் ஒரு பெரும் பகுதி அழிந்து விடுகின்றது. எனவே கிளர்ச்சி மற்றும் குழப்பத்திற்கான எந்த வாய்ப்பும் எஞ்சியிருப்பதில்லை. சங்கீஸ்கான், பக்துநஸர், திமூர், நாதிர்ஷா போன்ற பெரும் பெரும் வெற்றியாளர்கள் அனைவரும் அநீதியாளர்களாக இருந்தனர்.

ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வெற்றிகள் ஒருபோதும் சட்டம் மற்றும் நீதியின் எல்லைகளை மீறவில்லை. மனிதர்களை கொலை செய்வது ஒருபக்கம் இருக்கட்டும். மரங்களை வெட்டுவதற்கு கூட அனுமதியில்லாமல் இருந்தது. குழந்தை மற்றும் பெரியவர்களுக்கு எந்த தொல்லையும் கொடுப்பதற்கு அனுமதி இருக்கவில்லை. போர் மைதானத்தை தவிர (வெளியில்) எந்தவொரு நபரையும் கொலை செய்வதற்கு அனுமதி இருக்கவில்லை. அதாவது போர் மைதானத்தில் வேண்டுமானால் ஒருவரை கொலை செய்து கொள்ளலாம். அதைத் தவிர்த்து எவரையும் கொலை செய்யக்கூடாது. எதிரியுடன் எந்த சந்தர்ப்பத்திலும் உடன்படிக்கையை மீறவோ அல்லது ஏமாற்றுவதற்கோ அனுமதி வழங்கப்படவில்லை. எதிரி உங்களுடன் போரிட்டால் நீங்கள் அவர்களை ஏமாற்றக்கூடாது. எவருடைய மூக்கையும், காதையும் வெட்டக்கூடாது. எந்தவொரு குழந்தையையும் கொல்லக்கூடாது. மேலும் வெளிப்படையாக சண்டையிட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு வலியுறுத்தி கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன.

அடுத்து ஆட்சியை ஏற்றுக் கொண்டு விட்டு பின்னர் கிளர்ச்சியாளர்களாகி விட்டால் அதாவது ஒரு முறை கட்டுப்படுதலை ஏற்றுக் கொண்டு பின்னர் கிளர்ச்சி செய்தால் அவர்களிடமிருந்து மீண்டும் உடன்படிக்கை பெறப்பட்டு மன்னிப்பு வழங்கப்பட்டு வந்தது. எந்த அளவுக்கென்றால் அர்பூஸ் வாசிகள் மூன்று, மூன்று முறை தொடர்ந்து உடன்படிக்கை செய்து விட்டு அதை மீறி விட்டனர். அர்பூஸ் என்பது சிரியாவின் கடைசி எல்லையில் அமைந்துள்ள ஒரு நகரத்தின் பெயராகும். அப்படி அவர்கள் உடன்படிக்கையை மீறினாலும் அவர்கள் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டனர். ஆனால் அத்துடன் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த சொத்துகளுக்குரிய விலை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதாவது பணம் கொடுக்கப்பட்டு விட்டது.

தொடர்ந்து அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: கைபரைச் சார்ந்த யூதர்கள் சதி மற்றும் கிளர்ச்சி செய்த குற்றத்திற்காக நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். அப்போது அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்களுக்குரிய இழப்பீடு தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் எந்த இடத்தை கடந்து சென்றாலும் எல்லா இடத்திலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்கள் ஒரு நகரத்தில் குடியேறினால் ஓர் ஆண்டு வரை அவர்களிடமிருந்து எந்த ஜிஸ்யா வரியும் பெறப்பட வேண்டாம் என்று மாவட்டங்களின் அனைத்து அதிகாரிகளுக்கும் கட்டளைகள் அனுப்பப்பட்டன.

தொடர்ந்து அன்னார் எழுதுகின்றார்கள்: உலகில் இது போன்ற வெற்றியாளர்கள் இன்னும் பலர் கடந்துள்ளனர் என்று எந்த மக்கள் ஃபாரூக்கி வெற்றிகளுக்கு பதில் கொடுக்கின்றார்களோ அவர்கள் இந்த விஷயங்களைப் பார்க்க வேண்டும். இந்த அளவிற்கு எச்சரிக்கையுடன், கட்டுப்பாடுகளுடன், மன்னிப்புடன் உலகில் எந்த ஆட்சியாளர் அன்னியர்களின் நிலத்தை வெற்றி கொண்டார்? என்பதைக் காட்ட வேண்டும். இதைத் தவிர்த்து அலெக்ஸாண்டர் மற்றும் சங்கீஸ்கான் ஆகியோர் சுயமே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒவ்வொரு போரிலும் பங்கு பெற்றிருந்தனர். அவர்கள் சுயமே படைத்தளபதியாக திகழ்ந்து படையுடன் போரிட்டு வந்தனர். அது மட்டுமின்றி படைக்கு ஓர் சிறப்பு வாய்ந்த படைத்தளபதி கிடைத்திருந்தார். எனவே படையின் உள்ளம் வலிமை வாய்ந்ததாக இருந்தது. அவர்களிடம் இயல்பிலேயே தமது எஜமானருக்காக அர்ப்பணமாக வேண்டும் என்ற உணர்வு உருவாகி வந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது முழு கிலாஃபத் காலத்திலும் ஒரு முறை கூட எந்தப் போரிலும் பங்கெடுக்கவில்லை. எல்லா இடங்கிலும் படைகள் பணி செய்து வந்தன. ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கரங்களிலேயே அந்தப் படைகளின் கட்டுப்பாடு இருந்தது. ஒரு மாபெரும் தெளிவான வித்தியாசம் என்னவென்றால், அலெக்ஸாண்டர் போன்றவர்களின் வெற்றிகள் மேகங்களைப் போன்று கடக்கக்கூடியதாக இருந்தன. ஒரு முறை கூட்டமாக வந்து கடந்து விட்டன. அவர்கள் நாடுகளை வெற்றி கொண்டனர். ஆனால் அங்கு எந்தவொரு ஆட்சி அமைப்பையும் நிலைநாட்டவில்லை. இதற்கெதிரில் ஃபாரூக்கி வெற்றிகளில் இது நடைமுறையாக இருந்து வந்தது. அப்போது எந்த நாடுகளெல்லாம் வெற்றி கொள்ளப்பட்டனவோ அவை 1300 ஆண்டுகள் கழிந்த பிறகு இன்றும் கூட இஸ்லாத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நாட்டிற்கு தேவையான எல்லா வகையான ஏற்பாடுகளும் அங்கு நிலைநாட்டப்பட்டன.

அடுத்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வெற்றிகளின் சிறப்பம்சத்தைக் குறித்து அவர் இவ்வாறு எழுதுகின்றார்:

பொதுவான கருத்திற்கு ஏற்புடைய பதில் இதுவாகும். அதாவது வெற்றிகளில் காலத்தின் கலீஃபாவிற்கு சிறப்பான பங்கு இல்லை. மாறாக, அந்த நேரத்தில் இருந்த உத்வேகம் மற்றும் உறுதிப்பாட்டின் நிலைமையின் காரணமாகவே அனைத்து வெற்றிகளும் கிடைத்தன என்பது ஒரு கேள்வியாகும். ஆனால் காலத்தின் கலீஃபாவிற்கு எந்தப் பங்கும் இல்லை என்று கூறுகின்றவரது கருத்து எம்மைப் பொருத்தவரை சரியானதல்ல. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரின் காலத்திலும் அதே முஸ்லிம்களே இருந்தனர். ஆனால் நிலைமை என்னவாக இருந்தது? உத்வேகமும், தாக்கமும் சந்தேகத்திற்கிடமின்றி மின்னலைப் போன்ற ஆற்றல்களாகும். ஆயினும் பணி வாங்கக் கூடியவர்கள் அதே அளவில் ஆற்றல் பெற்றவராக இருக்கும்போதுதான் அவர்களின் ஆற்றல்களிலிருந்து பணி வாங்க முடியும். கற்பனைக்கான அவசியம் இல்லை. சம்பவங்கள் சுயமே இதற்கு தீர்ப்பு வழங்குகின்றன. முழுப் படையும் பொம்மையைப் போன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சைகைகளின்படி செயல்பட்டு வந்தது என்பது வெற்றிகளின் விளக்கமான நிலைகளை படிப்பதன் மூலம் தெளிவாக தெரிய வருகின்றது. படையின் கட்டமைப்பும், ஒழுங்கமைப்பும் அன்னாரின் சிறப்பான அரசியல் மற்றும் திட்டங்களின் விளைவாக இருந்தது.

படையின் ஒழுங்கு, வரிசைக் கிரமம், படையின் பயிற்சிகள், முகாம்களின் கட்டமைப்பு, குதிரை சவாரிகள், கோட்டைகளின் பாதுகாப்பு, குளிர் மற்றும் வெப்பத்தின் அடிப்படையில் தாக்குதல் நடத்துவதற்கான நேரத்தை தேர்ந்தெடுப்பத்தல், படையின் இடம் பெயர்தல், படை அதிகாரிகளை தேர்ந்தெடுத்தல், கோட்டையை உடைப்பதற்கான ஆயுதங்களை பயன்படுத்துதல் இதுபோன்ற அனைத்து விவகாரங்களையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே கண்டுபிடித்தார்கள். எந்த அளவிற்கு விநோதமான, ஆச்சரியமான வழிமுறைகள் மற்றும் ஆற்றல்களைக் கொண்டு நிறுவினார்கள் என்றால் அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சிறப்பம்சமாக இருந்தது.

ஈராக்கின் வெற்றிகளில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உண்மையில் சுயமே படைத்தளபதியாக பணி செய்து வந்தார்கள். படை மதீனாவிலிருந்து புறப்பட்டபோது ஒவ்வொரு கடக்கும் இடத்தையும் இன்னும் கூறப்போனால் வழிப்பாதை வரையிலும் அன்னார் சுயமே நிர்ணயித்திருந்தார்கள். இங்கிருந்து செல்ல வேண்டும். இங்கிருந்து கடக்க வேண்டும். இங்கு இதை செய்ய வேண்டும் என்றெல்லாம் தெளிவான திட்டமிடுதலை வழங்கி இருந்தார்கள். மேலும் அதற்கேற்ப எழுத்துப்பூர்வமான கட்டளைகளையும் அனுப்பி வந்தார்கள். காதிஸிய்யாவிற்கு அருகில் படை சென்றடைந்தபோது அந்த இடத்தின் வரைபடத்தை அனுப்பும்படி கூறினார்கள். பின்னர் அதன் அடிப்படையில் படையின் ஒழுங்கமைப்பு மற்றும் அணிவகுப்பு தொடர்பான வழிகாட்டல்களை வழங்கினார்கள். அதிகாரிகள் எந்தெந்த பணிகளில் நியமிக்கப்பட்டார்களோ அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சிறப்பான கட்டளைக்கேற்ப நியமிக்கப்பட்டு வந்தார்கள்.

தபரி வரலாற்று நூலில் ஈராக் சம்பங்களை நீங்கள் விளக்கமாக பார்த்தால் உங்களுக்கு இது தெரிய வரும். ஒரு பெரிய படைத்தளபதி தொலைவில் இருந்து கொண்டு முழுப்

படையையும் வழிநடத்தி வருகின்றார். அவரது சைகைக்கேற்பவே அனைத்தும் நிகழ்கின்றன. பத்து ஆண்டு காலகட்டத்தில் நடைபெற்று வந்த அனைத்து போர்களிலும் மிகவும் அபாயகரமான இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன. அதில் ஒன்று நஹாவந்த் போர் ஆகும். அதில் ஈரானியர்கள் ஃபாரசீகர்களின் மாநிலங்களில் எல்லா இடத்திலும் பொறுப்பாளர்களை அனுப்பி அனைத்து நாடுகளிலும் நெருப்பை மூட்டினர். லட்சக்கணக்கான படையை அனுப்பி முஸ்லிம்களை நோக்கி முன்னேறச் செய்தனர். இரண்டாவது சந்தர்ப்பம் என்னவென்றால், ரோமானிய கைஸர் தீவுவாசிகளின் உதவியுடன் மீண்டும் ஹிம்ஸின் மீது போர் தொடுத்திருந்தான்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அழகிய திட்டமே ஒரு பக்கம் எழுந்து வந்த புயலை வீழ்த்தியது. மற்றொரு பக்கம் ஒரு பெரும் மலையைப் போன்று அவர்களை (எதிரிகளை) தூள்தூளாக்கியது. இந்த சம்பவங்களின் விளக்கங்களுக்குப் பிறகு இந்த வாதம் தெளிவாக நிரூபணமாகி விடுகின்றது. உலகத்தின் வரலாறு தெரிந்ததிலிருந்து இன்று வரை ஃபாரூக்கே அஃஸம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு சமமாக எந்தவொரு வெற்றியாளரும் தோன்றவில்லை. அவர் வெற்றிகள் மற்றும் நீதி இரண்டையும் ஒருங்கே கொண்டிருந்தார்.

மவ்லானா ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 170–177, 287 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & உருது தாயிரா மஆருஃப் இஸ்லாமியா, தொகுதி 20 ஸேரே லஃப்ஸ் முஸ்தக் பக்கம் 529, 530 – லாஹூரிலுள்ள பஞ்சாப் பல்கலைகழகத்தின் உருது துறை சார்பாக அச்சிடப்பட்டது & உருது லுகத், ஸேரே லஃப்ஸ் நஸ்தூரியத் தொகுதி 19 பக்கம் 932 – கராச்சியில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 249, 250 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

வெற்றிகளும் கிடைத்தன. நீதி மற்றும் நேர்மையும் நிலைநாட்டப்பட்டன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்காக துஆ செய்தது குறித்து இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீது என்று கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை வெள்ளை ஆடை அணிந்திருப்பதை கண்டார்கள். உங்களது இந்த ஆடை புதிய ஆடையா? அல்லது சுத்தப்படுத்தப்பட்டதா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதற்கு என்ன பதில் கொடுத்தார்கள் என்று தமக்கு நினைவில்லை என்று ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு துஆ செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்: புத்தாடை அணியுங்கள். பாராட்டத்தக்க வாழ்க்கையை வாழுங்கள். ஷஹீதுகளின் மரணத்தை அடையுங்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றாக்ரள்: எனது எண்ணம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் இவ்வுலகிலும் மறுமையிலும் உங்களின் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்குவானாக.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல், முஸ்னத் அப்துல்லாஹ் பின் உமர் பின் கத்தாப் தொகுதி 2 பக்கம் 429 ஹதீஸ் எண் 5620 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோர் உஹது மலையின் மீது ஏறியபோது அந்த மலை அவர்களுடன் குலுங்கத் தொடங்கியது. அப்போது உஹதே! நின்று விடு. உன் மீது ஒரு நபியும், ஒரு சித்தீக்கும், இரண்டு ஷஹீதுகளும் உள்ளனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுந் நபி (ஸல்), ஹதீஸ் எண் 3675)

ஹஸ்ரத் உபை பின் கஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இஸ்லாமிய உலகம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தின்போது அழும் என்று ஜிப்ரீல் அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

(அல்மஜ்மவுல் கபீர் லித்திப்ரானீ, தொகுதி 1 பக்கம் 67, 68 அறிவிப்பு எண் 61 – 2003 ஆம் ஆண்டு தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இருந்த ஷஹாதத் ஆசை தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த இணையரான உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தை

اَللّٰهُمَّ ارْزُقْنِيْ قَتْلًا فِيْ سَبِيْلِكَ وَوَفَاةً فِيْ بَلَدِ نَبِيِّكَ

என்று கூறியதை நான் கேட்டேன். (அல்லாஹ்வே! உன் வழியில் எனக்கு நீ ஷஹாத்தை வழங்குவாயாக. மேலும் எனக்கு உனது தூதர் (ஸல்) அவர்களின் நகரத்தில் மரணத்தை வழங்குவாயாக).

அன்னார் கூறுகின்றார்கள்: இது எவ்வாறு சாத்தியம்? என்று நான் கேட்டேன். அப்போது إِنَّ اللّٰهَ يَأْتِيْ بِأَمْرِهٖ أَنّٰى شَاءَ (நிச்சயமாக அல்லாஹ் தான் விரும்பியபடி தனது கட்டளையை கொண்டு வருகின்றான்) என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 252 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹாதத் தொடர்பாக செய்த துஆவை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வுக்கு எவ்வளவு நெருக்கமானவராக இருந்தார்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனக்குப் பிறகு ஒருவர் நபியாக இருப்பார் என்றால் அவர் உமராக இருப்பார் என்று கூறினார்கள். இங்கு எனக்குப் பிறகு என்பதன் பொருள், உடனடியாக என்பதாகும். எனவே அன்னாரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்கு தகுதியானவராக கருதி இருந்தார்கள். அதாவது அந்த காலத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டு ஒருவரை ஷஹாதத் எனும் அந்தஸ்தில் இருந்து உயர்த்தி நபித்துவம் என்ற உயர்ந்த அந்தஸ்தில் அல்லாஹ் ஒருவரை நிலைநாட்டினால் அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தகுதியுடையவராக இருந்தார்கள். இந்த உமரின் தியாகங்களைப் பார்த்து ஐரோப்பாவின் கடுமையான எதிரிகள் கூட இந்த கூற்றை ஒப்புக் கொள்கின்றனர். இது போன்ற தியாகங்களை செய்யக் கூடிய மற்றும் இதுபோன்று தம்மைத்தாமே அழித்து கொள்ளக்கூடிய மனிதர் உலகில் மிகக் குறைவாகவே கிடைக்கின்றார். அன்னாரின் தொண்டுகளைப் பற்றி அவர்கள் எந்த அளவிற்கு உயர்த்திப் பேசுகின்றனர் என்றால் இஸ்லாத்தின் முன்னேற்றத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடனேயே அவர்கள் தொடர்புபடுத்துகின்றார்கள். அந்த உமர், இறைவா! எனது மரணம் மதீனாவில் ஷஹாதத் மூலமாக நடைபெற வேண்டும் என்று துஆ செய்து வந்தார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்பின் உத்வேகத்தில் இந்த துஆவை செய்திருந்தார்கள். உள்ளபடியே இந்த துஆ மிகவும் அபாயகரமானதாக இருந்தது. ஒருவர் மிகப்பெரும் வலிமை வாய்ந்தவராக திகழ்ந்து அனைத்து இஸ்லாமிய நாடுகளையும் வெற்றி கொண்டு மதீனாவை வந்தடைந்து பின்னர் அங்கு வந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்குகி விடுகின்ற வகையில் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்பது அந்த துஆவின் பொருளாக அமைகின்றது. ஆனால் உள்ளங்களின் நிலைகளை அறிகின்ற இறைவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த ஆசையையும் முழுமை செய்து விட்டான். மேலும் மதீனாவையும், அந்த ஆபத்துகளிலிருந்து பாதுகாத்து விட்டான். அதாவது அந்த துஆவிற்குப் பின்னால் பொதிந்திருந்த ஆபத்துகளிலிருந்து மதீனாவை பாதுகாத்து விட்டான்.

அது எவ்வாறென்றால் அந்த இறைவன் ஒரு நிராகரிப்பாளனின் கையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை மதீனாவிலேயே ஷஹீதாக்கி விட்டான். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் துஆவிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், தனது உயிரை அவனது வழியில் தியாகம் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்து விட வேண்டும் என்பதே அன்னாரின் பார்வையில் இறை நெருக்கத்திற்கான அடையாளமாக இருந்தது. ஆனால் அடியாரின் உயிரை இறைவன் காப்பாற்ற வேண்டும் என்பதே இன்று இறைநெருக்கத்தின் அடையாளமாக கருதப்படுகின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது குத்பாவில் ஒரு வஸிய்யத் செய்தவாறு அஹ்மதிகளிடம் இந்த விஷயத்தை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

குறிப்பிடுகின்றார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 17 பக்கம் 474, 475)

மற்றோரிடத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் மற்றும் துஆவைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எனக்கு மரணம் மதீனாவில் வர வேண்டும். அதுவும் ஷஹாதத் மூலம் மரணம் நிகழ வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எப்போதும் துஆ செய்து வந்ததாக அன்னாரைக் குறித்து எழுதப்பட்டுள்ளது.

பாருங்கள்! மரணம் என்பது எவ்வளவு பயங்கரமான விஷயமாகும். மரண நேரத்தில் மிகவும் அன்பிற்குரியவரும் கூட விலகி விடுகின்றார். ஒரு பெண்ணின் ஒரு மகள் நோய்வாய்ப்பட்டதாக கூறுகின்றார்கள்.

அதாவது மரணத்தைக் கண்டு மக்கள் எந்த அளவுக்கு அஞ்சுகின்றார்கள் என்பதை விளக்க ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். அந்த அச்சத்திற்குரிய ஒரு சம்பவம் உள்ளது. அது ஒரு கதையாகும். அதாவது ஒரு பெண்மணியின் மகள் நோய்வாய்ப்பட்டு விடுகின்றாள். இறைவா! எனது மகளை காப்பாற்றி விடு. அவளுக்கு பகரமாக நான் மரணித்து விட வேண்டும் என்று அவர் துஆ செய்து வந்தார். தனது மகள் மீது மிகவும் அன்பை அவர் வெளிப்படுத்தி வந்தார். ஓர் இரவில் அந்த பெண்ணின் மாட்டின் கயிறு தற்செயலாக அவிழ்ந்து விட்டது. அந்த மாட்டின் முகம் ஒரு பாத்திரத்தில் சிக்கிக் கொண்டது. அதாவது மாடு ஒரு பாத்திரத்தில் வாய் வைத்தது. அப்போது அதில் அதன் தலை சிக்கிக் கொண்டது. அந்த பசுவானது சிக்கிக் கொண்ட பாத்திரத்துடன் தனது தலையை உயர்த்தியவாறு இங்கும் அங்கும் ஓடியது. பசுமாட்டின் தலை சிக்கிக் கொண்டது. அது மிகவும் துன்பத்திற்குள்ளாகி ஓடத் தொடங்கியது.

பசுமாட்டின் உடலில் முகத்திற்கு பகரமாக வேறு ஏதோ பெரிய பொருள் இருப்பதைப் பார்த்து அந்தப் பெண் (தாய்) பயந்து விட்டார். அவர் கண் விழித்து இது என்ன? என்று பார்த்தார். பசுமாடு ஓடிக் கொண்டிருந்தது. அதன் முகத்தில் வேறொரு பொருள் தென்பட்டது. எனவே அந்தப் பெண்மணி பயந்து விட்டார். எனது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. இஸ்ராயீல் எனது உயிரை எடுப்பதற்காக வந்துள்ளார் என்று அந்தப் பெண்மணி புரிந்து கொண்டார். இஸ்ராயீலே! நான் நோய்வாய்ப்படவில்லை. மாறாக, அதோ அவர் அங்கே இருக்கின்றார் என்று தன்னையும் அறியாமல் அந்தப் பெண்மணி கூறினார். அதாவது தனது மகளின் பக்கம் சைகை செய்து அவரது உயிரை எடுத்துக் கொள் என்று கூறினார். உயிர் இந்த அளவிற்கு விருப்பத்திற்குரிய விஷயமாகும். அதாவது அதனை பாதுகாப்பதற்கு மனிதன் சாத்தியமான எல்லா திட்டங்களையும் செய்கின்றான் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

அந்தப் பெண்மணி துஆ செய்து கொண்டிருந்தார். ஆனால் உள்ளபடியே ஒரு பெரும் அபாயம் உருவாகிவிட்டபோது தனது மகளின் பக்கம் சைகை செய்து அவரது உயிரை எடுப்பாயாக என்று அந்தப் பெண்மணி கூறி விட்டார்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உயிரைக் காப்பதற்கு சாத்தியமான எல்லா திட்டங்களையும் மனிதன் செய்கின்றான். சிகிச்சை செய்து செய்து அவன் திவாலாகி விடுகின்றான். ஆனால் சஹாபா பெருமக்களுக்கு அதே உயிரை இறைவனுக்காக கொடுப்பதற்கு எந்த அளவுக்கு ஆசை இருந்ததென்றால் எனக்கு மதீனாவில் ஷஹாதத் கிடைக்க வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துஆக்கள் செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த துஆ மிகவும் அபாயகரமானதாக இருந்தது. எதிரி மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும். மேலும் மதீனாவின் வீதிகளில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட வேண்டும் என்பது அதன் பொருளாக இருந்தது. ஆனால் இறைவன் அன்னாரின் துஆவை வேறொரு வடிவில் ஒப்புக் கொண்டு விட்டான். மேலும் அன்னார் ஒரு முஸ்லிம் என்று அழைக்கப்படக் கூடிய நபரின் கைகளாலேயே மதீனாவில் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள். ஷஹீதாக்கியவர் காஃபிராக இருந்தார் என்று கூறப்படுகின்றது. ஆயினும் வேறு சில இடங்களில் இந்த அறிவிப்பும் கிடைக்கின்றது. அதாவது அவர் முஸ்லிம் என்று அழைக்கப்பட்டு வந்தார். ஆனால் அவர் காஃபிராகவே இருந்தார் என்று பெரும்பாலான அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

முதல் முறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அவனை காஃபிர் என்று கூறியுள்ளார்கள். மற்றோர் இடத்தில் முஸ்லிம் என்று அழைக்கப்படக் கூடியவராக இருந்தார் என்று கூறியுள்ளார்கள். அதாவது அவர் முஸ்லிமாக இருந்தாரா? இல்லையா? என்பது குறித்து சுயமே அன்னாருக்கு முழுமையான மன நிறைவு இல்லை. சிலரின் பார்வையில் அந்த நபர் முஸ்லிமாக இருக்கவில்லை. ஆயினும் சிலரின் பார்வையில் அந்த நபர் முஸ்லிமாக இருக்கவில்லை என்று அன்னார் கூறுகின்றார்கள். எவ்வாறிருப்பினும் அவன் ஓர் அடிமையாக இருந்தான். அவன் மூலம் அல்லாஹ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கினான். எனவே மனிதன் சுயமே எந்த விஷயத்தை விரும்புகின்றானோ மேலும் எதற்கு ஆசைப்படுகின்றானோ அதுவே அவனுக்கு துன்பமாக மாறிவிடுவதில்லை.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 1 பக்கம் 166, 167)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இந்த சம்பவத்தை ஒரு குத்பாவில் எடுத்துரைத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் மற்றும் மரணம் தொடர்பாக சஹாபிகளின் கனவுகளை ஹஸ்ரத் அபூபுர்தா (ரலி) அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள். ஹஸ்ரத் அவ்ஃப் பின் மாலிக் (ரலி) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். மக்கள் ஒரு மைதானத்தில் ஒன்றுகூட்டப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒரு நபரின் கை மற்ற மக்களிலிருந்து மூன்று கை அளவு உயரமாக உள்ளது. இது யார்? என்று நான் கேட்டேன். இவர் உமர் பின் கத்தாப் ஆவார் என்று கூறப்பட்டது. என்ன காரணத்தால் மற்ற மக்களிலிருந்து அவர் உயரமானவராக இருக்கின்றார்? என்று நான் கேட்டேன். அன்னாரிடம் மூன்று சிறப்புகள் உள்ளன. அவர் அல்லாஹ்வின் விவகாரங்களில் பழி சுமத்தக்கூடிய எவருடைய பழிக்கும் அஞ்சுவதில்லை. அவர் அல்லாஹ்வின் வழியில் ஷஹீதாகக்கூடியவர் ஆவார். அவர் கலீஃபா ஆவார். அவர் கலீஃபாவாக ஆக்கப்படுவார் என்று கூறப்பட்டது.

பின்னர் ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்கள் தனது இந்தக் கனவை கூறுவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். அந்தக் காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்தார்கள். அவர்களிடம் இது கூறப்பட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் அன்னாருக்கு நற்செய்தி வழங்கினார்கள். மேலும் உங்களது கனவை கூறுங்கள் என்று ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அந்த நபர், அவர் கலீஃபாவாக ஆக்கப்படுவார் என்று கூறியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை கண்டித்தார்கள். மேலும் மௌனமாக இருக்கும்படி கூறினார்கள். எனென்றால் இது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவமாகும். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆனபோது அன்னார் சிரியாவை நோக்கிச் சென்றார்கள். அன்னார் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்களை கண்டார்கள். அன்னார் அவரை அழைத்தார்கள். மேடை மீது நிற்கச் செய்தார்கள். மேலும் தனது கனவை கூறும்படி அவரிடம் கூறினார்கள். அவரும் தனது கனவை கூறினார்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் விவகாரங்களில் பழி சுமத்தக்கூடியவரின் எந்த பழிக்கும் நான் அஞ்சுவதில்லை என்ற விஷயத்தை பொருத்தவரை அல்லாஹ் என்னை அந்த நபர்களை சார்ந்தவனாக ஆக்கிவிடுவான் என்று நான் நம்புகின்றேன். என்னை அல்லாஹ் கலீஃபாவாக ஆக்குவான் என்ற விஷயத்தைப் பொருத்தவரை நான் கலீஃபாவாக நியமிக்கப்பட்டு விட்டேன். மேலும் அல்லாஹ் என்னிடத்தில் ஒப்படைத்த பணிகளை செய்வதற்கு அவன் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் துஆ செய்கின்றேன். அடுத்து நான் ஷஹீதாகி விடுவேன் என்ற விஷயத்தை பொருத்தவரை எனக்கு ஷஹாதத் எவ்வாறு கிடைக்க முடியும்? நான் அரேபிய தீப கற்பத்திலேயே வசிக்கின்றேன். என்னை சுற்றியிருக்கின்ற மக்களிடம் நான் போர் புரிவதில்லை. அல்லாஹ் நாடினால் அவன் இந்த ஷஹாதத்தைக் கொண்டு வருவான். அதாவது வெளிப்படையில் அவ்வாறான நிலைமை இல்லை தான். ஆனால் அல்லாஹ் விரும்பினால் அந்த சூழலை ஏற்படுத்துவான்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூமூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் கனவில் கண்டேன். நான் ஏராளமான வழிப்பாதைகளில் செல்கின்றேன். பின்னர் அவை அனைத்தும் அழிந்து விட்டன. ஒரு பாதை மட்டுமே எஞ்சியிருக்கின்றது. நான் அந்த வழியில் செல்லத் தொடங்கினேன். எந்த அளவுக்கென்றால் நான் ஒரு மலையை சென்றடைந்தேன். அப்போது அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள். அன்னாரின் ஒரு புறத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருக்கின்றார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சைகை செய்து அவர்களை வரும்படி அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்போது إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ அல்லாஹ்வின் மீது ஆணையாக! அமீருல் மூமினீன் மரணமடைந்து விட்டார்கள் என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நீங்கள் இந்த கனவை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுத மாட்டீர்களா? என்று நான் கேட்டேன். அதற்கு நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அன்னாரின் மரணத்தைக் குறித்து தகவல் கொடுக்கக் கூடியவர் இல்லை என்று கூறினார்கள். (மனதுக்குள் இதைக் கூறுகின்றார்).

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 252, 253 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சயீத் பின் அபூஹிலால் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஜுமுஆ நாளன்று மக்களிடம் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அல்லாஹ்வின் புகழையும், தூய்மையையும் எடுத்துரைத்தார்கள். மக்களே! எனக்கு ஒரு கனவு காட்டப்பட்டுள்ளது. அதன் மூலம் எனது மரணத்திற்கான நேரம் நெருங்கி விட்டதாக நான் கருதுகின்றேன். நான் கனவில் இவ்வாறு கண்டேன். ஒரு சிவப்பு நிற கோழி உள்ளது. அது என்னை இரண்டு முறை கொத்தி விட்டது. நான் இந்த கனவை அஸ்மா பின்த் உமைஸிடம் கூறினேன். அரபி அல்லாதவர்களில் ஒரு நபர் என்னை கொலை செய்வார் என்று அன்னார் இதற்கு விளக்கமளித்துள்ளதாக அன்னார் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 255 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது எந்த நாளில் தாக்குதல் நடந்தது? மேலும் எந்த நாளன்று அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்? ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. தப்காத்துல் குப்ராவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

புதன்கிழமையன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மீது தாக்குதல் நடந்தது. வியாழக்கிழமையன்று அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு துல்ஹஜ் 26 ஆம் தேதி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து காயம் ஏற்படுத்தப்பட்டது. ஹிஜ்ரி 24 ஆம் ஆண்டு 1 முஹர்ரம் அன்று காலை வேளையில் அன்னார் (ரலி) அவர்களின் நல்லடக்கம் நடைபெற்றது.

உஸ்மான் அக்னஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஓர் அறிவிப்பில் வருகின்றது. 26 துல்ஹஜ் புதன்கிழமையன்று அன்னாரின் மரணம் நிகழ்ந்தது.

அபூமஃஷர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துல்ஹஜ் 27 ஆம் தேதியன்று ஷஹீதாக்கப்பட்டார்கள் என்று ஓர் அறிவிப்பில் உள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 278, ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தப்ரி வரலாற்று நூலிலும், இப்னு கஸீர் வரலாற்று நூல் மட்டுமல்லாமல் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களின் பார்வையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு துல்ஹஜ் 26 ஆம் தேதி காயமடைந்தார்கள். மேலும் ஹிஜ்ரி 24 ஆம் ஆண்டு முஹர்ரம் 1 ஆம் தேதி அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. அதே நாளன்று அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 3 பக்கம் 448 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 154 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஷஹாதத் சம்பவத்தின் விளக்கம் சஹீஹ் புகாரியில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அம்ர் பின் மைமூன் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் காயமுறுவதற்கு சில நாட்களுக்கு முன்பு அன்னாரை மதீனாவில் கண்டேன். அன்னார் ஹுஸைஃபா பின் யமாம் மற்றும் உஸ்மான் பின் ஹுனைஃப் ஆகியோருடன் நின்று கொண்டிருந்தார்கள். மேலும் ஈராக்கின் நிலங்கள் தொடர்பான ஏற்பாடுகளில் நீங்கள் இருவரும் என்ன செய்துள்ளீர்கள்? என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். நீங்கள் இருவரும் எப்படிப்பட்ட ஒரு வரையறையை நிர்ணயித்துள்ளீர்கள் என்றால் அதற்கு அவர்களிடம் ஆற்றல் இல்லை என்று அன்னார் கூறினார்கள். அப்போது அவர்களின் ஆற்றலுக்கேற்பவே அவர்கள் மீது நாங்கள் வரி விதித்துள்ளோம் என்று அவ்விருவரும் கூறினர். அதாவது நிலத்தில் அந்த அளவிற்கு விளைச்சல் வருவதற்கு சக்தி (Potential) உள்ளது. அதற்கு அதில் எந்த வரம்பு மீறுதலும் செய்யப்படவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவ்வாறென்றால் அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட வரியை அவர்களின் நிலத்தில் நீங்கள் இருவரும் விதித்து விடக் கூடாது என்பதை பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அவர்கள் இருவரும் இல்லை என்று கூறினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் என்னை உயிருடன் வைத்தால் நான் நிச்சயமாக ஈராக் வாசிகளின் விதவைகளை எந்த நிலையில் விட்டுச் செல்வேன் என்றால் அவர்களுக்கு எனக்குப் பிறகு வேறொருவரின் உதவியை நாடி நிற்க அவசியம் இருக்காது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: இந்த உரையாடலுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இன்னும் நான்காம் இரவை கழிந்திருக்கவில்லை. அதற்குள் அன்னார் காயமுற்று விட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அன்னார் காயமுற்ற நாளன்று நான் நின்று கொண்டிருந்தேன். எனக்கும் அன்னாருக்கும் மத்தியில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்களைத் தவிர்த்து வேறு எந்தவொரு நபரும் இருந்திருக்கவில்லை. இரண்டு வரிசைகளுக்கு மத்தியில் அன்னார் கடந்து செல்லும்போது வரிசைகளை நேராக்கிக் கொள்ளுங்கள் என்று கூறுவது அன்னாரின் வழக்கமாக இருந்தது. எந்த அளவுக்கென்றால் அவர்களுக்கு மத்தியில் எந்த இடைவெளியும் எஞ்சியிருக்கவில்லை என்ற நிலையை பார்க்கும்போது தான் அன்னார் முன்னேறிச் செல்வார்கள். மேலும் அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள். சில நேரங்களில் ஃபஜர் தொழுகையில் யூசுஃப் அதிகாரத்தையோ அல்லது நஹல் அதிகாரத்தையோ அல்லது அதுபோன்ற ஓர் அதிகாரத்தை முதல் ரக்அத்தில் மக்கள் ஒன்றுகூடி விடுவதற்காக ஓதுவார்கள். தற்போது அன்னார் அல்லாஹு அக்பர் என்றே கூறியிருந்தார்கள். அப்போது நான் கொல்லப்பட்டு விட்டேன் அல்லது என்னை நாய் கடித்து விட்டது என்று அன்னார் கூறுவதை நான் கேட்டேன். தாக்குதல் தொடுத்தவன் அன்னார் மீது தாக்குதல் தொடுத்த பிறகு இரு முனைகளை கொண்ட கத்தியை கையில் ஏந்திக் கொண்டு ஓடினான். அவன் வலப்பக்கமும், இடப் பக்கமும் ஒருவரை கடந்து செல்லும்போதெல்லாம் காயத்தை ஏற்படுத்திக் கொண்டே சென்றான். அதாவது மக்கள் அல்லது தன்னை பிடிக்கக்கூடிய ஒரு நபர் பிடித்து விடக் கூடாது என்ற அச்சத்தால் அவன் கடந்து சென்ற வழியில் அதே கத்தியால் அந்த நபர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே சென்றான். மக்களுக்கு காயம் ஏற்படுத்திக் கொண்டே சென்றான். எந்த அளவுக்கென்றால் அவன் 13 நபர்களுக்கு காயத்தை ஏற்படுத்தினான். அவர்களில் 7 நபர்கள் மரணமடைந்து விட்டனர்.

சஹீஹ் புகாரியில் இந்த இடத்தில் புர்னுஸ் என்ற சொல் வந்துள்ளது. புர்னுஸ் என்பதன் பொருள் என்னவென்றால், தலையை மறைக்கக்கூடிய பகுதியை உள்ளடக்கிய ஆடை ஆகும். நீளமான அங்கியும் அத்துடன் தலையை மறைக்கக்கூடிய தொப்பியும் அதில் இணைந்திருக்கும். புர்னுஸ் என்றால் நீளமான தொப்பி என்றும் கூறுவார்கள். எவ்வாறிருப்பினும் அந்த கோட்டை அவன் மீது அவர் வீசினார். தான் பிடிபட்டு விட்டேன் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டபோது அவன் தனது கழுத்தை அறுத்துக் கொண்டான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் கரத்தை பிடித்து (தொழுகை நடத்த) முன்னால் அனுப்பினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்போது அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அருகில் இருந்தார்கள். அன்னாரும் இதனைக் கண்டார்கள். அதாவது நான் பார்த்ததை அவரும் கண்டார். பள்ளிவாசலின் பக்கங்களில் இருந்தவர்கள் இதனை அறியவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரல் மறையும் வரை அவர்கள் இதை அறியவில்லை. அவர்கள் சுப்ஹானல்லாஹ்; சுப்ஹானல்லாஹ் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் மக்களுக்கு சுருக்கமான தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகையை முடித்து விட்ட பிறகு இப்னு அப்பாஸே! என்னை யார் தாக்கியது? என்று பார்க்கும்படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் சிறிது நேரம் சுற்றித் திரிந்தார்கள். பின்னர் வந்தார்கள். பிறகு முகைராவின் அடிமை என்று அன்னார் கூறினார்கள்.

கைவினைஞரான அதே நபரா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஆம்! என்று ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் அவரை அழிப்பானாக. அவர் தொடர்பாக நல்ல முறையில் நடந்து கொள்ளும்படி நான் கட்டளை வழங்கி இருந்தேன். நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன். தான் இஸ்லாத்தை சார்ந்தவன் என்று வாதிடக்கூடிய நபரின் கைகளால் அல்லாஹ் எனக்கு மரணத்தை வழங்கவில்லை. அந்த நபர் முஸ்லிமாக இருக்கவில்லை என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றது.

இப்னு அப்பாஸே! நீரும், உமது தந்தையும் அரபி அல்லாத இந்த அடிமைகள் மதீனாவில் அதிகமாக இருக்க வேண்டும் என்று விரும்பி வந்தீர்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் மிக அதிகமான அடிமைகள் இருந்தனர். தாங்கள் விரும்பினால் நான் அதை முடித்து விடவா? என்று ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதாவது நீங்கள் விரும்பினால் மதீனாவிலுள்ள அரபி அல்லாத அடிமைகளை நாங்கள் கொன்று விடட்டுமா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், வேண்டாம். அது சரியல்ல என்று கூறினார்கள். குறிப்பாக அவர்கள் உமது மொழியிலேயே பேசிக் கொண்டிருக்கும்போதும், உங்களது கிப்லாவை நோக்கி முகம் திருப்பி தொழுது கொண்டிருக்கும்போதும், உங்களைப் போன்று ஹஜ் செய்கின்றபோதும் அவ்வாறு செய்யக் கூடாது. அது தவறு என்று கூறினார்கள்.

ஏராளமான அடிமைகள் முஸ்லிம்களாக ஆகி இருந்தனர். பின்னர் நாங்கள் அன்னாரை அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தூக்கிக் கொண்டு அன்னாரின் வீட்டிற்கு கொண்டு சென்றோம். நாங்களும் அன்னாருடன் வீட்டிற்கு சென்று விட்டோம். அந்த நாளுக்கு முன்பாக அதுபோன்ற ஒரு துன்பம் முஸ்லிம்களுக்கு வந்ததே இல்லை என்பது போன்று இருந்தது. எதுவும் ஆகாது என்று சிலரும், அன்னார் தொடர்பாக எனக்கு அச்சம் உள்ளது. அன்னார் உயிர் பிழைக்க மாட்டார்கள் என்று சிலரும் கூறினர். கடைசியில் அன்னாரிடம் பானம் கொண்டு வரப்பட்டது. அன்னார் ஒரு பானத்தை அருந்தினார்கள். அது அன்னாரின் வயிற்றிலிருந்து வெளியேறி விட்டது. பின்னர் அன்னாரிடம் பால் கொண்டு வரப்பட்டது. அன்னார் அதை குடித்தார்கள். அதுவும் காயம் ஏற்பட்ட பகுதியின் வழியாக வெளியேறி விட்டது. அப்போது அன்னார் (ரலி) அவர்கள் மரணித்து விடுவார்கள் என்று மக்கள் புரிந்து கொண்டனர்.

அம்ர் பின் மைமூன் கூறுகின்றார்கள்: பின்னர் நாங்கள் அன்னாரிடம் சென்றோம். மற்ற மக்களும் வந்தனர். அவர்கள் அன்னாரை புகழத் தொடங்கினர். ஓர் இளைஞர் வந்தார். அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் அல்லாஹ்வின் இந்த நற்செய்தியால் மகிழ்ச்சியடையுங்கள். தாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபி என்ற காரணத்தால் அது தங்களுக்கு கிடைத்துள்ளது. ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதன் காரணமாக அது தங்களுக்கு கிடைத்துள்ளது. அதனை தாங்கள் நன்கு அறிவீர்கள். பிறகு தாங்கள் கலீஃபாவாக ஆக்கப்பட்டீர்கள். தாங்கள் நீதியுடன் நடந்து கொண்டீர்கள். பின்னர் ஷஹீதாக்கப்பட்டுள்ளீர்கள் என்று அந்த நபர் கூறினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இந்த விஷயங்கள் அனைத்தும் சரியாகவே இருக்க வேண்டும் என்பது எனது ஆசை ஆகும். என்னிடம் எந்த கேள்வி கணக்கும் இருக்கக்கூடாது. எனக்கு எந்த நற்கூலியும் வேண்டாம். அந்த நபர் திரும்பிச் செல்ல முற்பட்டபோது அந்த நபரின் கீழாடை நிலத்தில் உரசிக் கொண்டிருந்தது. அப்போது அந்த இளைஞனை என்னிடம் திருப்பி அழைத்து வாருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

மேலும் எனது அண்ணன் மகனே! உனது ஆடையை உயர்த்திக் கொள்வாயாக. இவ்வாறு செய்தால் உமது ஆடை நீண்ட காலம் வரை இருக்கும். நிலத்தில் உரசிக் கொண்டே செல்வதால் அது வீணாகி விடும். மேலும இந்த செயல் உனது இறைவனின் பார்வையில் இறையச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும். அதாவது சில முறை ஆணவம் உருவாகி விடும். அதிலிருந்து விலகிக் கொள்ள முடியும். அந்தக் காலத்தில் செல்வந்தரின் அடையாளமாக மிக நீளமான ஆடைகளை மக்கள் அணிந்து வந்தனர். எனவே ஆணவம் உருவாகி விடக் கூடாது. மேலும் இது இறையச்சத்திற்கு நெருக்கமான காரியமாகும் என்று அன்னார் கூறினார்கள்.

பின்னர் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: என் மீது எவ்வளவு கடன் உள்ளது? என்று பாருங்கள். அன்னார் கணக்கிட்டபோது 84 ஆயிரம் திர்ஹம் அல்லது அதை விட அதிகமாக இருந்தது. உமரின் குடும்பத்தின் சொத்துக்களை விற்ற பிறகும் அந்த சொத்துக்களால் இந்த கடனை அடைக்க முடியவில்லையென்றால் பனூ அதீ பின் கஃப்பிடம் அதை கேட்க வேண்டும். அவர்களின் செல்வத்தின் மூலமாகவும் கடன் தீரவில்லையென்றால் குரைஷிகளிடம் கேட்கவும். இவர்களை தவிர்த்து வேறு எவர்களிடமும் செல்லக்கூடாது. இந்தக் கடனை என் சார்பாக அடைத்து விடு என்று அன்னார் கூறினார்கள். மேலும் உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடம் செல். உமர் தங்களுக்கு சலாம் கூறுவதாக அன்னாரிம் கூறு. அமீருல் மூமினீன் என்று கூறக்கூடாது. ஏனென்றால் நான் இன்று நம்பிக்கையாளர்களின் அமீர் இல்லை. உமர் பின் கத்தாப் தனது இரண்டு தோழர்களுக்கு மத்தியில் அடக்கம் செய்யப்படுவதற்கு தங்களிடம் அனுமதி வேண்டுகிறார் என்று கூறும்படியும் அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

புகாரியின் விரிவுரையான உம்ததுல் காரியில் இவ்வாறு வருகிறது. அன்னாருக்கு மரணத்திற்கான நம்பிக்கை ஏற்பட்டு விட்ட பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்வாறு கூறினார்கள். அமீருல் மூமினீன் என்று கூறுவதன் காரணமாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தயங்கலாம் என்ற சைகை அந்த கூற்றில் இருந்தது. எனவே அப்துல்லாஹ் அவர்கள் ஸலாம் கூறினார்கள். உள்ளே வருவதற்கு அனுமதி வேண்டினார்கள். பின்னர் அன்னாரிடம் சென்றார்கள். அன்னார் அமர்ந்து கொண்டு அழுது கொண்டிருப்பதை அவர் கண்டார். உமர் பின் கத்தாப் (ரலி) தங்களுக்கு சலாம் கூறுகின்றார். அன்னார் தமது இரு தோழர்களுடன் அடக்கம் செய்யப்படுவதற்கு தங்களிடம் அனுமதி வேண்டுகின்றார் என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு நான் அந்த இடத்தை எனக்காக வைத்திருந்தேன். ஆனால் இன்று என்னை விட அன்னாருக்கு முன்னுரிமை வழங்குகின்றேன் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் திரும்பி வந்தபோது, அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் வந்து விட்டார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறப்பட்டது. என்னை உட்கார வையுங்கள் என்று அன்னார் கூறினார்கள். ஒருவரின் துணை கொண்டு அன்னார் எழுந்து அமர்ந்தார்கள். என்ன செய்தி கொண்டு வந்துள்ளீர்? என்று அன்னார் கேட்டார்கள். தாங்கள் விரும்புகின்ற அதே செய்தியைத் தான் என்று அப்துல்லாஹ் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அனுமதி வழங்கி விட்டார்கள் என்று கூறினார்கள்.

அன்னார் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினார்கள். இதை விட வேறு எந்தவொரு விஷயத்தைக் குறித்தும் நான் கவலைப்பட்டதில்லை. நான் மரணித்த பிறகு என்னை தூக்கிக் கொண்டு செல்லுங்கள். பின்னர் சலாம் கூறுங்கள். உமர் பின் கத்தாப் அனுமதி வேண்டுகின்றார் என்று கூறுங்கள். அன்னார் எனக்கு அனுமதி வழங்கி விட்டால் பின்னர் என்னை அறையினுள் கொண்டு சென்று நல்லடக்கம் செய்து விடுங்கள். அன்னார் என்னை திருப்பி அனுப்பி விட்டால் பின்னர் என்னை முஸ்லிம்களின் கபர்ஸ்தானிற்கு கொண்டு சென்று விடுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா அவர்கள் வந்தார்கள். ஏனைய பெண்களும் அன்னாருடன் வந்தார்கள். அவர்களை நாங்கள் கண்டபோது நாங்கள் சென்று விட்டோம். அந்தப் பெண்கள் அன்னாரிடம் வீட்டிற்குள் சென்றார்கள். சிறிது நேரம் வரை அன்னாரிடம் அமர்ந்து அழுது கொண்டிருந்தார்கள். பின்னர் சில ஆண்கள் வீட்டின் உள்ளே வருவதற்கு அனுமதி வேண்டியபோது அந்த ஆண்கள் வந்தவுடனேயே அவர்கள் உள்ளே சென்று விட்டார்கள். நாங்கள் உள்ளே இருந்து அவர்களின் அழு குரலை கேட்டுக் கொண்டிருந்தோம். அமீருல் மூமினீன் அவர்களே! வஸிய்யத் செய்து விடுங்கள். ஒருவரை கலீஃபாவாக நியமித்து விடுங்கள் என்று மக்கள் கூறினர். அப்போது நான் இந்த சில நபர்களைத் தவிர்த்து வேறு எவருக்கும் கிலாஃபத்திற்கான தகுதி இருப்பதாக பார்க்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபர்களின்

மீது திருப்தி கொண்ட நிலையிலேயே மரணித்தார்கள். அன்னார் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோரின் பெயரை கூறினார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் உமர் உங்களுக்கு மத்தியில் இருப்பார். ஆனால் அந்த விவகாரத்தில் அதாவது கிலாஃபத்தில் அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்று கூறினார்கள். கிலாஃபத் சஅத் (ரலி) அவர்களுக்கு கிடைத்து விட்டால் பின்னர் அவரே கலீஃபாவாக இருப்பார். இல்லையென்றால் உங்களில் எவர் அமீராக ஆக்கப்பட்டாலும் பின்னர் அவர் சஅத் (ரலி) அவர்களிடமிருந்து உதவி பெற்றுக் கொண்டிருப்பார். அவர் ஒரு பணியை செய்ய இயலாதவராக இருந்தார் என்ற காரணத்தாலோ அல்லது அவர் ஒரு நம்பிக்கை துரோகம் செய்தார் என்ற காரணத்தாலோ அவரை நான் பணி நீக்கம் செய்யவில்லை என்று அன்னார் கூறினார்கள்.

மேலும் எனக்குப் பிறகு கலீஃபாவாக வரக்கூடியவருக்கு முஹாஜிர்கள் குறித்து வஸிய்யத் செய்கின்றேன். அவர் அவர்களின் உரிமைகளை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அவர்களின் கண்ணியத்தை பேண வேண்டும். அன்ஸார் தொடர்பாகவும் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு நான் வஸிய்யத் செய்கின்றேன். அவர்கள் மதீனாவில் ஏற்கனவே வசித்து வந்தார்கள். முஹாஜிர்கள் வருவதற்கு முன்பாகவே ஈமான் கொண்டிருந்தார்கள். அவர்களில் நல்ல முறையில் நடந்து கொள்பவர் ஒப்புக் கொள்ளப்படுவார். அவர்களில் தவறிழைத்தவர்களை மன்னிக்க வேண்டும். மேலும் அனைத்து நகரங்களின் வாசிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு வஸிய்யத் செய்கின்றேன். ஏனென்றால் அவர்கள் இஸ்லாத்தின் அடைக்கலம் ஆவார்கள். அவர்கள் செல்வத்தை பெறுவதற்கான வழிமுறை ஆவார்கள். அவர்களின் விருப்பத்துடன் அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டும். அவர்களின் தேவைகள் நிறைவேறிய பிறகு எஞ்சியவற்றிலிருந்து பெறப்பட வேண்டும். மேலும் நான் அவருக்கு அதாவது இனி வர இருக்கும் கலீஃபாவிற்கு காட்டரபிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு வஸிய்யத் செய்கின்றேன். ஏனென்றால் அவர்கள் அரேபியர்களின் ஆணி வேர் ஆவர். அவர்களின் செல்வங்களிலிருந்து கூடுதலாக உள்ளவைகளிலிருந்து பெறப்பட வேண்டும். மேலும் அவை அவர்களுக்கு மத்தியிலுள்ள ஏழைகளிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

நான் அந்த கலீஃபாவிற்கு அல்லாஹ் மற்றும் அவனின் தூதரின் உரிமைகள் குறித்தும் வஸிய்யத் செய்கின்றேன். அவர் அந்த உடன்படிக்கைகளை முழுமை செய்ய வேண்டும். அதனை பாதுகாப்பதற்காக போர் புரிய வேண்டும். அவர்களின் சக்திக்கு அதிகமாக அவர்களின் மீது சுமை சுமத்தக் கூடாது.

அன்னார் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டபோது நாங்கள் அன்னாரை சுமந்து கொண்டு வெளியேறினோம். நடந்து சென்றபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் உமர் பின் கத்தாப் அனுமதி வேண்டுகின்றார் என்று கூறினார்கள். உள்ளே கொண்டு வாருங்கள் என்று அன்னார் கூறினார்கள். எனவே அன்னார் உள்ளே கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு அன்னாரின் இரண்டு தோழர்களுடன் அன்னார் வைக்கப்பட்டார்கள். அன்னாரின் நல்லடக்கம் நடந்து முடிந்த பிறகு கிலாஃபத் தேர்தலை நடத்துவதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிய நபர்கள் ஒன்றுகூடினர். பின்னர் அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(சஹீஹுல் புகாரி, கிதாப் ஃபஸாயில் அஸ்ஹாபுந் நபி (ஸல்), ஹதீஸ் எண் 3700 & அம்தத்துல் காரி, ஷரஹ் சஹீஹ் புகாரி தொகுதி 16 பக்கம் 292 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 1 பக்கம் 137 – 2005 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள நுஃமானி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

தற்போது இந்த குறிப்பு தொடர்கின்றது. எஞ்சியவற்றை இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் எடுத்துரைப்பேன். இன்று ஜெர்மனியின் ஜல்ஸா ஸாலானா (ஆண்டு மாநாடு) ஆரம்பமாகின்றது. அல்லாஹ் இதனை அருளுக்குரியதாக ஆக்குவானாக. அதிக அதிகமான ஜெர்மன் அஹ்மதிகளுக்கு அதிலிருந்து பயன் பெறும் நற்பேறை வழங்குவானாக. இது இரண்டு நாள் ஜல்ஸா ஆகும். நாளை மாலை இன்ஷா அல்லாஹ் நிறைவு அமர்வு உள்ளது. நான் அவர்களிடம் சொற்பொழிவாற்றுவேன். அது MTA வில் இங்குள்ள நேரத்திற்கேற்ப சுமார் 3:30 மணியளவில் ஒளிபரப்பாகும். ஜல்ஸாவின் ஏனைய நிகழ்ச்சிகள் Live Streaming மூலமாக இன்று முதல் ஜெர்மனியர்களுக்காக ஒளிபரப்பாகின்றது. ஜெர்மனியர்கள் அங்கு பார்க்க முடியும். எனவே இதிலிருந்து அதிக அதிகமாக பயன் பெறுங்கள்.

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு காயிப் ஜனாஸா தொழுகைகளை நடத்துவேன். அவர்களின் நற்குறிப்பையும் செய்து விடுகின்றேன். முதலாவது ஜனாஸா, இந்தோனேஷியா ஜமாஅத்தின் முபல்லிக் ஆகிய மதிப்பிற்குரிய கமருத்தீன் சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 65 வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

1972 ஆம் ஆண்டு அன்னார் 15 வது வயதில் பைஅத் செய்தார்கள். துவக்க கல்விக்குப் பிறகு தமது வாழ்க்கையை ஜமாஅத்தின் தொண்டிற்காக அர்ப்பணித்து விட்டார்கள். பின்னர் அன்னார் மார்க்க கல்வி பெறுவதற்காக பாகிஸ்தான் சென்று விட்டார்கள். 1986 ஆம் ஆண்டு ஜூன் 30 ல் அன்னார் ஷாஹித் பட்டம் பெற்றார்கள். 1986 ஜூலை மாதத்தில் முபல்லிக் ஆக அன்னார் பணியமர்த்தப்பட்டார்கள். மிகவும் அழகிய மற்றும் வேதனைமிக்க குரலில் திருக்குர்ஆனை அன்னார் திலாவத் செய்து வந்தார்கள். மிகவும் தூய்மையான மற்றும் உணர்வுமிக்க ஜமாஅத்தின் சேவகராக அன்னார் திகழ்ந்தார்கள். சுமார் 35 வருடங்கள் அன்னார் ஜமாஅத்திற்காக தொண்டாற்றியுள்ளார்கள்.

அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: நீங்கள் ஒரு முரப்பியின் மனைவி ஆவீர்கள். எனவே நீங்கள் ஜமாஅத்தின் தொண்டுகளிலும் முன்னணியில் இருக்க வேண்டுமென்று அன்னார் என்னிடம் கூறி வந்தார்கள்.

அடுத்து அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதிலும், கிலாஃபத்தின் மீது அன்பு கொள்வதிலும் அன்னார் தனித்தன்மை வாய்ந்தவராக இருந்தார்கள். சிறியவரிடமும், பெரியவரிடமும் மிகவும் கண்ணியத்துடன் நடந்து வந்தார்கள். எந்தவொரு அஹ்மதியிடம் பேசும்போதும் எப்போதும் ஜமாஅத்தின் மீது அன்பும், நன்றியுணர்வும் கொள்வதற்கு நிச்சயம் அறிவுரை செய்வார்கள். ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு அதிக அதிகமாக கவனமூட்டி வந்தார்கள். அஹ்மதி அல்லாதவரை சந்திக்கும்போது அவருக்கு நிச்சயம் தப்லீக் செய்வார்கள். மற்றவரும் மகிழ்ச்சியடையும் விதத்தில் மிகவும் அன்புடனும், உளப்பூர்வமாகவும் பேசி வந்தார்கள். நோய்வாய்ப்பட்ட நாளிலும் ஃபஜர் தொழுகைக்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பாகவே எழுந்து தஹஜ்ஜுத் தொழுது திலாவத் செய்து வந்தார்கள். ஆரோக்கியம் இருந்த வரை நடந்தே பள்ளிவாசலுக்கு சென்று வந்தார்கள்.

அன்னாரின் மகன் உமர் ஃபாரூக் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார். ஜாமிஆ அஹ்மதிய்யா இந்தோனேஷியாவில் ஆசிரியராக உள்ளார். அன்னார் கூறுகின்றார்கள்: வீட்டிலும், வெளியிலும் நடந்து செல்லும்போதும் சில முறை திருக்குர்ஆனின் ஏதாவதொரு பகுதியை அழகிய குரலுடன் ஓதிக் கொண்டிருப்பார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களின் மொழியாக்கத்தையும், சரிபார்க்கும் பணியையும் அன்னார் செய்துள்ளார்கள். இந்தப் பணிகளின்போது அதிலும் குறிப்பாக மொழியாக்கப் பணிகளை செய்து கொண்டிருக்கும்போது அரபி கஸீதாக்களை அதிகம் படித்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சூழல்களையும், சம்பவங்களையும் எடுத்துரைக்கும்போது அன்னாரின் கண்கள் கலங்கி விடும். எனக்கு பெரும்பாலும் அஹ்மதிகளின் சோதனைகள், துன்பங்கள் மற்றும் தியாகங்களைப் பற்றிய சம்பவங்களை கூறி வந்தார்கள். மேலும் எவ்வாறு அவர்கள் தனது வாழ்க்கையில் துன்பங்களை சகித்தார்கள் என்று தனது சொந்த அனுபவத்தையும் எனக்கு எடுத்துரைத்து வந்தார்கள்.

இளைய மகன் ஜஃபருல்லாஹ் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்கள்: அன்னார் மிகவும் தைரியமானவரும், கடுமையாக உழைக்கக்கூடிய மனிதராகவும் இருந்தார்கள். மிக எளிய வாழ்க்கையை கழித்தார்கள். எப்போதும் போதுமென்ற மனதிற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவராக இருந்தார்கள்.

அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பும் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அடுத்த ஜனாஸா மற்றும் இரண்டாவது நற்குறிப்பு மர்ஹூம் சுல்தான் ஹாரூன் கான் சாஹிப் அவர்களின் மனைவியான சபீஹா ஹாரூன் சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 73 வது வயதில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

சபீஹா ஹாரூன் சாஹிபா அவர்களின் குடும்பத்தில் அன்னாரின் தந்தையின் பைஅத்தின் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் சுயமே ஆய்வு செய்து 18 வது வயதில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்திருந்தார்கள். பின்னர் அன்னாரின் தந்தைவழிப் பாட்டனார் தனது மகனுக்குப் பிறகு பைஅத் செய்தார்கள். அல்லாஹ் அன்னாருக்கு 3 மகன்களையும், 3 மகள்களையும் வழங்கினான். அன்னாரின் ஒரு மகன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மருமகன் ஆவார்கள்.

அன்னாரின் மூத்த மகன் சுல்தான் முஹம்மது கான் கூறுகின்றார்கள்: எனது தாயாரின் மூத்த மகன் 2 வயதில் ஒரு விபத்தில் மரணமடைந்து விட்டார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஜனாஸா சந்தர்ப்பத்தில், அல்லாஹ் உங்களுக்கு இதற்கு மாற்றாக சிறந்த மகனை வழங்குவான். அவர் அழகாகவும் இருப்பார். நீண்ட ஆயுளையும் பெறக் கூடியவராக இருப்பார் என்று கூறியிருந்தார்கள்.

அன்னாரின் மகன் சுல்தான் அஹ்மத் கான் சாஹிப் கூறுகின்றார்கள்: குழந்தைப் பருவம் முதல் இது வரை எனது அதிக நேரம் எனது தாயுடன் கழிந்துள்ளது. இது எனது நற்பேறாகும். மிகவும் அன்பு செலுத்தக்கூடிய மற்றும் தவறுகளை மன்னிக்கக்கூடிய தாயாக அன்னார் இருந்தார்கள். ஒருபோதும் எவரைக் குறித்தும் அன்னார் புறம் பேசியது கிடையாது.

அன்னாரது மகள் மஹ்மூதா சுல்தானா சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்: எனது தாயார் நல்லியல்பு படைத்தவராகவும், அமைதியான இயல்பை கொண்டவராகவும், உயர்தரமான நற்பண்புகளுக்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். ஜமாஅத்தின் மீது உண்மையான அன்பு கொண்டவராகவும், கிலாஃபத்தின் மீதான அன்பிலும், நன்றியுணர்விலும் உச்சத்தை தொட்டவராகவும் இருந்தார்கள். அதையே எனக்கும் அறிவுறுத்தி வந்தார்கள். நற்பண்பு கொண்டவராகவும், உறவினர்களை பேணக் கூடியவராகவும் இருந்தார்கள். அன்னாரின் விருந்து உபசரிப்பு முழு குடும்பத்தில் பிரபலமானதாகும். எவரது உள்ளத்தையும் புண்படுத்தியது கிடையாது. புறம் பேசுவதை கடுமையாக எதிர்த்து வந்தார்கள். எப்போதும் அதிலிருந்து விலகி இருப்பதற்கு எங்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள். புறம் பேசப்படுகின்ற சபைகளிலிருந்து எழுந்து சென்று விடுவார்கள். அவர்களின் முகத்தில் கோபம் வெளிப்படும். எப்போதும் மன்னிப்பை கையாண்டு வந்தார்கள். எனது தாயாரின் மீது கொலை வெறி தாக்குதல் நடத்தக்கூடிய எதிரிக்கும் கூட எனது தாயார் ஒருபோதும் தீய துஆ செய்தது கிடையாது என்று அன்னாரின் மகள் கூறுகின்றார்கள். அல்லாஹ் அவருக்கு நேர்வழி வழங்குவானாக என்று நான் துஆ செய்கின்றேன் என்று அன்னார் எப்போதும் கூறி வந்தார்கள். ஏழை நோயாளிகளுக்காக அதிகமான மென்மையை தனது உள்ளத்தில் கொண்டிருந்தார்கள். இடது கைக்கு கூட தகவல் இல்லாத அளவில் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

அன்னாரின் இரண்டாவது மகள் வஜீஹா சாஹிபா கூறுகின்றார்கள்: ஒரு மௌனமான இயல்பிற்கு அன்னார் சொந்தக்காரராக இருந்தார்கள். மிக அதிகமான தான தர்மங்கள் செய்யக்கூடிய பெண்மணியாக அன்னார் இருந்தார்கள். இரகசியமாக தான தர்மங்கள் செய்து வந்தார்கள். அதனைக் குறிப்பிடுவதை அன்னார் விரும்பியது கிடையாது.

அன்னார் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் நன்மைகளை தொடர்வதற்கு அன்னாரின் பிள்ளைகளுக்கும் நற்பேறு வழங்குவானாக.

(தமிழில்: மவ்லவி அ. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

முதல் பக்கத்தின் தொடர்ச்சி...

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்று...

பெற்றுள்ளது. அன்னாரும் தனது கடிதத்தை பிஸ்மில்லாஹ் என்றே துவங்கியுள்ளார்கள். திருக்குர்ஆனில் إِنَّهُ مِنْ سُلَيْمَانَ وَإِنَّهُ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ இவ்வாறு வருகின்றது. அதாவது இந்தக் கடிதம் சுலைமான் புறமிருந்து எழுதப்படுகின்றது. பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று கடிதம் துவங்குகின்றது. ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களை குறிப்பிட்டவாறும் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதாவது அன்னார் தனது படகில் ஏறும்போது தமது தோழர்களிடம் இவ்வாறு கூறினார்கள்:

ارْكَبُوْا فِيْهَا بِسْمِ اللّٰهِ مَجْرٖىهَا وَمُرْسٰىهَا

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 1 பக்கம் 14 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

(மல்ஃபூஸாத் தொடர்ச்சி...)

ஆகியவற்றின் மீது பெருமை கொள்கின்றவரும், மேலும் தமது சகோதரரை எள்ளி நகையாடி இழிவான பெயரை வைப்பவரும், தமது சகோதரரின் உடல் குறைகளை மக்களிடம் கூறுபவரும் ஆணவம் கொண்டவர் ஆவார். ஒரு நொடியில் அத்தகைய நபர் மீது உடல் குறைகளை இறக்கக் கூடிய அந்த இறைவனை அவர் அறியாதவராக இருக்கின்றார். அந்த இறைவன் அந்த சகோதரரை விட அந்த (ஆணவம் கொள்ளும்) நபரை மோசமானவராக ஆக்கி விடுவான். எவர் ஏளனத்திற்கு உள்ளாக்கப்பட்டாரோ அவருக்கு ஒரு நீண்ட காலம் வரை ஆற்றல்கள் குறைந்து விடாத அளவிலும், பொய்ப்படுத்தப்படாத அளவிலும் அவரது ஆற்றல்களில் இறைவன் அருட்களை வழங்கி விட முடியும். ஏனென்றால் அவன் தான் விரும்பியவற்றை செய்கின்றான். அதேபோன்று தமது ஆற்றல்களின் மீது நம்பிக்கை வைத்து துஆ கேட்பதில் சோம்பேறியாக இருக்கின்ற நபரும் ஆணவம் கொண்டவர் ஆவார். ஏனென்றால் ஆற்றல்கள் மற்றும் வல்லமைகளின் மூலமான அந்த இறைவனை அந்த நபர் அடையாளங்கண்டு கொள்ளவில்லை. மேலும் அத்தகைய நபர் தமது இருப்பை பெரிதாக கருதியுள்ளார்.

எனவே எனது அன்பிற்குரிய மக்களே! நீங்கள் இந்த அனைத்து விஷயத்தையும் நினைவிற் கொள்ளுங்கள். நீங்கள் (இவற்றில்) ஏதாவதொரு அம்சத்தின் அடிப்படையில் இறைவனின் பார்வையில் ஆவணம் கொண்டவராக ஆகி அது குறித்து நீங்கள் அறியாமல் இருக்கும் நிலை உருவாகி விடக்கூடாது. தனது சகோதரரின் ஒரு தவறான சொல்லை ஆணவத்துடன் திருத்துகின்ற ஒரு நபரும் ஆணவத்தில் பங்கு பெற்றவர் ஆவார். மேலும் தனது சகோதரரின் கூற்றை பணிவுடன் கேட்க விரும்பாதவரும், முகத்தை திருப்பிக் கொள்பவரும் ஆணவத்தில் பங்கு பெற்றவர் ஆவார். தனக்கு அருகில் அமர்கின்ற ஓர் ஏழை சகோதரரை வெறுக்கின்ற நபரும் ஆணவத்தில் பங்கு பெற்றவர் ஆவார். மேலும் துஆ செய்யக்கூடியவரை ஏளனமாக பார்க்கின்ற நபரும் ஆணவத்தில் பங்கு பெறுகின்றார். மேலும் இறைவனால் அனுப்பப்பட்டவருக்கும், தூதருக்கும் முழுமையாக கட்டுப்பட விரும்பாத நபரும் ஆணவத்தில் ஒரு பங்கு வகிக்கின்றார். மேலும் இறைவனால் அனுப்பப்பட்டவர் மற்றும் தூதரின் கூற்றுகளை கவனத்துடன் கேட்காதவரும், அவரது எழுத்துக்களை கவனத்துடன் படிக்காதவரும் ஆணவத்திலிருந்து ஒரு பங்கு வகிக்கின்றார். எனவே நீங்கள் முயற்சி செய்யுங்கள். உங்களிடம் ஆணவத்தின் எந்தவொரு அம்சமும் எஞ்சியிருக்கக்கூடாது. ஏனென்றால் நீங்கள் அழிந்து விடக்கூடாது. மேலும் நீங்கள் உங்களது குடும்பத்துடன் இரட்சிப்பு பெற வேண்டும். (நூருஸூலுல் மஸீஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 402)

(11 வது பக்கத்தின் தொடர்ச்சி...)

ஹதீஸ்களில் பல்வேறு தரூதுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் உம்மத்தின் ஆலிம்களிடமும் பலதரப்பட்ட தரூதுகள் நடைமுறையில் உள்ளன. அவர்கள் அதற்கு பல்வேறு பெயர்களை சூட்டியுள்ளனர். அவற்றில் சில மிக நீளமான தரூதுகளாகும். மேலும் சில சுருக்கமானவையாக உள்ளன. மிகவும் அருளுக்கு காரணியாகவும், அருளுக்குரிய தரூதாகவும் இருப்பது என்னவென்றால், அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து வெளிப்பட்டதாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளுக்கு கற்றுக் கொடுத்த தரூது ஆகும். இந்த விவகாரங்களில் அசல் விஷயம் என்பது மனிதனின் நிய்யத்தும், அன்பும், கவனமும் ஆகும். அவன் எவ்வாறு அல்லாஹ்வின் அன்பை ஈர்க்க விரும்புகின்றான் என்பதாகும். எனவே எந்த நிய்யத்துடன், அன்புடன், கவனத்துடன் அந்த விவகாரத்தை மனிதன் செயலாற்றுகின்றானோ அதே வடிவில் அல்லாஹ் வரை அந்த மனிதனின் அந்த எண்ணமும், கலப்படமற்ற தன்மையும் நிச்சயம் சென்றடைந்து விடுகின்றது.

(ஸஹூர் அஹ்மது கான் – முபல்லிக் PS அலுவலக பதிவுத்துறை, இலண்டன். (நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 9 ஏப்ரல் 2021)

## 126 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

## ஹுஸூர் அவர்களிடம் கேட்கப்பட்ட முக்கியமான கேள்விகளும், அதற்குரிய பதில்களும்

(பகுதி – 13)

**கேள்வி:** பள்ளிவாசல்களில் தொழுகைக்காக சிறுவர்கள் பாங்கு கொடுப்பது தொடர்பாக ஒரு நண்பர் மதிப்பிற்குரிய ஜமாஅத்தின் முஃப்தி சாஹிப் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஃபத்வாவிலிருந்து கருத்து வேறுபாடு கொண்டவாறு ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களிடம் பிள்ளைகளுக்கு பாங்கு கொடுப்பதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று தனது கருத்தை கடிதத்தில் எழுதியிருந்தார்.

ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் டிசம்பர் 25, 2019 அன்று தமது கடிதத்தில் கீழ்க்கண்ட பதிலை வழங்கி இருந்தார்கள்.

**பதில்:** இந்த விவகாரத்தில் மதிப்பிற்குரிய முஃப்தி சாஹிப் அவர்களின் பதில் முற்றிலும் சரியானதாகும். நான் அதில் உடன்படுகின்றேன். பாங்கு கொடுக்கக் கூடியவர்களுக்கும் ஏதாவது நிபந்தனைகள் இருந்திருக்குமென்றால் ஹுஸூர் (ஸல்) அவர்கள் நிச்சயமாக அதன் பக்கம் நமக்கு கவனமூட்டி இருப்பார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையை நடத்தக் கூடியவர்களுகென்று பல நிபந்தனைகளை எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால் தொழுகைக்கான நேரம் வந்தால் உங்களில் ஒருவர் பாங்கு கொடுக்கட்டும் என்று மட்டுமே பாங்கு கொடுப்பது தொடர்பாக கூறியுள்ளார்கள். பாங்கு கொடுப்பவருக்கென்று அன்னார் (ஸல்) அவர்கள் எந்த நிபந்தனையையும் எடுத்துரைக்கவில்லை. எனவே பாங்கு கொடுப்பது ஒரு நற்கூலிக்கான பணியாகும். ஆயினும் அதற்காக அசாதாரண நிபந்தனைகளை விதிக்கும் வகையிலான பொறுப்பு ஒன்றும் அது அல்ல. மாறாக, அழகிய குரல் படைத்த மேலும் பாங்கு கொடுக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் அந்த பணியை செய்ய முடியும். பிள்ளைகளுக்கு பாங்கு கொடுப்பதற்கான வாய்ப்பு வழங்குவதால் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. அதன் மூலம் அவர்களிடம் மார்க்கப் பணி செய்வதற்கு ஆர்வம் உருவாகின்றது. அது ஒரு மிகச்சிறந்த விஷயமாகும். நான் சுயமே இங்கு முபாரக் பள்ளிவாசலில் பல சிறுவர்களை பாங்கு கொடுக்கும்படி செய்கின்றேன்.

குறிப்பு: ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் தமது கடிதத்தில் மதிப்பிற்குரிய முஃப்தி சாஹிப் அவர்களின் எந்த ஃபத்வாவை உறுதிப்படுத்தியுள்ளார்களோ அந்த ஃபத்வாவும் வாசகர்களின் பயனுக்காக கீழே பதியப்படுகின்றது.

பாங்கு கொடுப்பதற்கு குறைந்தபட்ச வயது என்ன? சிறு பிள்ளைகள் பாங்கு கொடுக்க முடியுமா?

**முஃப்தி சாஹிப் அவர்களின் ஃபத்வா:** பாங்கு கொடுப்பதற்கென்று எந்தவொரு வயதும் நிர்ணயிக்கப்பட்டதாக நமக்கு ஷரீஅத்திலிருந்து தெரிய வரவில்லை. எனவே ஒரு சிறுவர் சரியான வழிமுறையில் பாங்கு கொடுப்பதற்கு ஆற்றல் பெற்றுள்ளார் என்றால் அவர் பாங்கு கொடுக்கலாம்.

**கேள்வி:** ஒரு பெண்மணி முடி வெட்டுவது தொடர்பாகவும், அந்த முடிகளை முஸ்லிம் அல்லாத கேன்ஸர் நோயாளிக்கு தானம் செய்வது தொடர்பாகவும் ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களிடம் வழிகாட்டல் வேண்டினார்.

ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் 25 டிசம்பர் 2019 அன்று அந்த கேள்விக்கு தமது கடிதத்தில் கீழ்க்கண்ட பதிலை வழங்கி இருந்தார்கள்.

**பதில்:** தேவைக்கேற்ப பெண்கள் முடியை வெட்டிக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. அந்த வகையில் ஹஜ் மற்றும் உம்ராவை நிறைவேற்றும்போது பெண்கள் தமது முடிகளை வெட்டிய பிறகே இஹ்ராமை கழற்றுகின்றார்கள். ஹதீஸில் வருகின்றது. பெண் சஹாபிகள் தேவையின்போது தமது முடிகளை வெட்டி வந்தார்கள். ஆயினும் பெண்களுக்கு தமது முடிகளை வழித்துக் கொள்வதற்கு அனுமதி இல்லை. அதேபோன்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஆண்கள் பெண்களைப் போன்றும், பெண்கள் ஆண்களைப் போன்றும் ஒப்புமையை மேற்கொள்வதிலிருந்து தடுத்துள்ளார்கள். எனவே பெண்கள் ஆண்களைப் போன்ற வடிவில் முடி வெட்டக் கூடாது. ஆயினும் அழகுக்காக உகந்த அளவில் முடி வெட்டிக் கொள்ளலாம். ஆனால் அதில் ஆண்களுக்கான ஒப்புமை உருவாகி விடக்கூடாது. அவ்வாறிருந்தால் அதில் எந்தத் தவறும் இல்லை. ஒரு நோயாளிக்கு முடியை தானம் செய்வது நற்கூலிக்கான பணியாகும். அதில் எந்தத் தவறும் இல்லை. ஏனென்றால் ஒரு மனிதன் சக மனிதனுக்கு தனது இரத்தத்தையும், ஏனைய உறுப்புகளையும் தானமாக வழங்க முடியுமென்றால் முடியை ஏன் வழங்கக் கூடாது.

**கேள்வி:** ஒரு நண்பர் ஹுஸூர் (அய்ய) அவர்களிடம் தூதரின் ஏளனத்திற்கான தண்டனை, திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை மனனம் செய்வது, தரூது மற்றும் ஏனைய திக்ர்களை செய்வது மற்றும் பல்வேறு துஆக்கள் மற்றும் சூராக்களை எண்ணிக் கொண்டு ஓதுவது தொடர்பாக பல கருத்துக்களை கூறி அது தொடர்பாக வழிகாட்டல் வேண்டியிருந்தார்.

ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் டிசம்பர் 25, 2019 அன்று தமது கடிதத்தில் அந்த கேள்விகளுக்கு கீழ்க்கண்ட பதிலை தமது வழிகாட்டலாக வழங்கி இருந்தார்கள்.

தூதரை ஏளனம் செய்ததற்காக இந்த உலகில் தண்டனை வழங்குவதற்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் எந்தவொரு மனிதனுக்கும் அதிகாரம் வழங்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட தூதரை ஏளனப்படுத்திய எந்தவொரு நபருக்கும் தண்டனை வழங்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற தூதரின் மீது மிகுந்த நேசம் கொண்டவர்கள் ஏளனம் செய்யும் தீயவருக்கு தண்டனை வழங்க ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் அனுமதி வேண்டினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கும் கூட அதற்கு அனுமதி வழங்கவில்லை. தமது எஜமானர் மற்றும் தலைவரின் முன்மாதிரியின்படி நடந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அதே போதனையைத்தான் வழங்கியுள்ளார்கள். அத்துடன் இஸ்லாம் உலகின் பல்வேறு தரப்பட்ட மார்க்கங்களுக்கும், தலைவர்களுக்கும், ஏனைய ஆட்சியாளர்களுக்கும் இந்த வழிகாட்டலை வழங்கியுள்ளது. அதாவது எந்தவொரு நபரின் மார்க்கத்தையும், அவர்களின் கண்ணியத்திற்குரிய தலைவரையும், அந்த மார்க்கத்தை ஒப்புக் கொண்டவர்களுக்கு துன்பம் ஏற்படுகின்ற வகையில் நினைவு கூறக் கூடாது என்று இஸ்லாம் வழிகாட்டியுள்ளது. எனவே ஒரு பக்கம் இந்த உலகில் எந்தவொரு நபருக்கும் தூதரை ஏளனம் செய்ததன் காரணமாக தண்டனை வழங்குவதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை.

மற்றொரு பக்கம் ஒரு நபர் ஏனைய மார்க்கம் மற்றும் அவர்களின் தலைவர்களை ஆகுமற்ற சொற்களில் நினைவு கூறக்கூடாது என்ற போதனையையும் வழங்கியுள்ளது.

(2) திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை மனனம் செய்வதற்குரிய வழிமுறையின் பக்கம் கவனமூட்டுவதற்கு சிறந்த விஷயம் அதிகமாக அதனைப் படிப்பதாகும். ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) ஆகியோரின் இதுபோன்ற புகார்களின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த விவகாரங்களின் பக்கம் கவனம் செலுத்துவதற்கும், அதனைத் தொடர்ந்து அதிகமாக படிப்பதற்கும் அவர்களுக்கு அறிவுரை வழங்கி இருந்தார்கள்.

(3) தரூது ஓதுவதில் உருக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இதுவே வழிமுறையாகும். அதாவது அன்புடனும், நேசத்துடனும் அதனை அதிகமாக ஓதி வர வேண்டும். நாம் எவ்வாறு நமது ஏனைய பணிகளில் ஆர்வம் கொள்கின்றோமோ மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்துகின்றோமோ அதேபோன்று இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நாம் இந்த நன்மையான பணிகளிலும் அதே அன்பையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்தினால் நிச்சயமாக நோக்கத்தை அடைந்து விடலாம். இன்ஷா அல்லாஹ். தரூது அதிகமாக ஓதுவது நிச்சயமாக மிகவும் அருளுக்குரியதாகும். மனிதனின் ஒவ்வொரு துஆவும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் மீது தரூது ஓதுவதன் மூலமே அல்லாஹ்வின் சந்நிதானத்திற்கு சென்றடைகின்றது. அது குறித்து நபிமொழிகளிலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் தரூது ஓதுவது மட்டுமே ஒவ்வொரு மனிதனுக்கும் போதுமானதாக இருந்திருந்தால் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே தரூது மட்டுமின்றி ஏனைய துஆக்களையும் ஏன் ஓதினார்கள்? ஏனைய சஹாபிகளுக்கும், சஹாபியாக்களுக்கும் ஏன் பல்வேறு வகையான துஆக்களை கற்றுக் கொடுத்தார்கள்? ஹதீஸ்களிலும் ஏராளமான துஆக்களின் குறிப்பு நமக்கு கிடைக்கின்றது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் அந்த துஆக்களை சுயமே செய்துள்ளார்கள். மேலும் சஹாபிகளுக்கும், சஹாபியாக்களுக்கும் கற்றுக் கொடுத்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் தூய வாழ்க்கையிலும் இதே வழிமுறைதான் நமக்கு காணக் கிடைக்கின்றது.

إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ (எண்ணங்களுக்கேற்பவே செயல்கள் அமையும்)

என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப ஒரு நபர் இறைவனின் அருட்களைப் பெறுவதற்காக தரூதை ஓர் ஊடகமாகக் கொண்டு இந்த அழகிய எண்ணத்துடன் தமது அனைத்து தேவைகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதன் மூலம் கேட்கின்றார் என்றால் அப்போது அல்லாஹ்வும் அவரது நிய்யத் மற்றும் அழகிய எண்ணத்திற்கேற்ப அவருடன் நடந்து கொள்வான். உதாரணமாக, ஒரு ஹதீஸே குத்ஸியில் أَنَا عِنْدَ ظَنِّ عَبْدِي بِي என்று அல்லாஹ் கூறுகின்றான்.

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 11 Nov 2021 Issue No. 45

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் (2013 செப்டம்பர்)

**29 அக்டோபர் 2013 (திங்கட்கிழமை)**

ஹுஸூர் (அய்ய) அவர்கள் 5:00 மணிக்கு ஹோட்டலிலிருந்து புறப்பட்டு 5:15 மணியளவில் பைத்துல் முகீத் பள்ளிவாசலை வந்தடைந்து ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். ஃபஜர் தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். காலையில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற ஜமாஅத்துகளின் கடிதங்களையும், Fax, தபால்கள் மற்றும் அறிக்கைகளையும் படித்தார்கள். மேலும் தமது அருளுக்குரிய கரங்களால் அவற்றிற்குரிய வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

**Maori அரசர் சார்பாக ஹுஸூர் (அய்ய) அவர்களை கண்ணியப்படுத்தும் வகையில் வரவேற்பு நிகழ்ச்சி**

இன்று ஹுஸூர் (அய்ய) அவர்களை கண்ணியப்படுத்தும் வகையில் நியூஸிலாந்தின் பழமை வாய்ந்த Maori சமுதாயத்தின் அரசர் சார்பாக ஒரு வரவேற்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. நியூஸிலாந்தின் இந்த பழமை வாய்ந்த குடிமக்களான Maori மக்கள் 13 ஆம் கிறிஸ்துவ நூற்றாண்டின்போது Oceania ன் கிழக்குப் பகுதியான Polynesia விலிருந்து இடம் பெயர்ந்து இந்த தீவை வந்தடைந்தார்கள். அவர்கள் இந்த தீவிற்கு Aotearoa என்று பெயர் வைத்தார்கள். அது தற்போது நியூஸிலாந்து என்று அழைக்கப்படுகிறது.

இந்த Maori மக்கள் ஒரு சமுதாயம் என்ற ரீதியில் ஒன்றாக வசித்து வரவில்லை. மாறாக, சிறிய சிறிய கோத்திரங்களில் முழு நாட்டிலும் பரவி இருந்தார்கள். நியூஸிலாந்தில் அவர்கள் புதிய செடிகளையும் வளர்த்தார்கள். அதனை அவர்கள் தங்களது சொந்த பகுதியிலிருந்து இங்கு கொண்டு வந்திருந்தார்கள். அவர்களுக்கென்று தனியான நாகரீகமும், சடங்கு சம்பிரதாயங்களும் தனி மொழியும், மரபுகளும் உள்ளன.

கிறிஸ்துவ நூற்றாண்டின் 17 ஆம் ஆண்டில் ஐரோப்பிய மக்கள் இங்கு நியூஸிலாந்து நிலத்தை வந்தடைந்தார்கள். மேலும் இதனைக் கைப்பற்ற விரும்பினார்கள். அப்போது இந்த Maori கோத்திரங்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தின. Maori சமுதாயம் மிகவும் புரியும் தன்மை கொண்ட, போர் ஆற்றல்மிக்க சமுதாயமாக இருந்தது. Maori மக்களை தோற்கடிப்பது கடினம் என்பதை பிரித்தானிய இராணுவம் உணர்ந்தபோது அவர்கள் 1840 ஆம் ஆண்டில் Maori சமுதாயத்துடன் அமைதிக்கான ஒப்பந்தத்தை செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்திற்கு Treaty of Waitangi என்று பெயர் சூட்டப்பட்டது.

பிரித்தானியா குடிமக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்களது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றார்கள் என்பதை Maori மக்கள் கண்டபோது அவர்கள் அதற்கு எதிரான திட்டத்தை துவக்கினார்கள். மேலும் 1850 ஆம் ஆண்டில் Maori மக்கள் பிரித்தானியா ராணியைப் போன்று தங்களுக்கு ஓர் அரசரை உருவாக்கிக் கொள்ள எண்ணம் கொண்டார்கள். வடக்கு தீவின் மத்திய பகுதியில் வசிக்கக்கூடிய Maori கோத்திரங்கள் தங்களுக்கு ஒரு தலைவராக Putatau Te Whero என்பவரை தமது தலைவராக ஆக்கிக் கொண்டார்கள்.

தற்போதைய Tuheitia Paki, 2006 ஆம் ஆண்டு அரசர் ஆனார். இவர் 7 வது அரசர் ஆவார். அவரின் தங்குமிடம் Ngaruawahia என்ற ஊரில் உள்ளது. அது ஆக்லாந்திலிருந்து சுமார் 100 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. Maori மக்களுக்கு அவர்களின் சமுதாய கூடம் அதாவது Marae என்று அழைக்கப்படுகின்ற சமுதாயக் கூடம் மிகவும் முக்கியத்துவத்தை கொண்டதாகவும் உள்ளது. மேலும் அதனை ஒரு புனித ஸ்தலமாக அவர்கள் கருதுகின்றனர். Maori நாகரீகத்தின் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால், அவர்கள் தமது விருந்தினர்களை வரவேற்பதற்கு ஒரு சிறப்பான வழிமுறையை வைத்துள்ளனர். அதற்காக Marae என்ற இடத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. இவ்வாறு வரவேற்பிற்குப் பிறகு அந்த விருந்தினர் Marae இடம் மற்றும் கோத்திரத்தின் அங்கமாக கருதப்படுகின்றார்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் நியூஸிலாந்து வருவதற்கான நிகழ்ச்சி உருவானபோது Maori அரசரின் Marae கவுன்ஸில் தனது அரசர் புறமிருந்து ஹுஸூர் (அய்ய) அவர்களுக்கும், ஜமாஅத்தின் குழுவினருக்கும் Marae விற்கு வருவதற்கு அழைப்பு கொடுத்தது. Maori சமுதாயத்தின் மரபுகளுக்கேற்ப ஓர் அரசாங்கத்தின் தலைவர் அல்லது ஒரு பெரிய கோத்திரத்தின் அரசருக்காக மட்டுமே நடத்தப்படக்கூடிய வரவேற்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு அரசரின் ஒப்புதலுக்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களுக்காக செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் நமக்கு தரப்பட்டது. இதேபோன்று Maori சென்டரில் Marea என்ற இடத்தில் Maori கொடியுடன் அஹ்மதிய்யத்தின் கொடியையும் ஏற்றுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது என்ற தகவலும் தரப்பட்டது.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் தமது தங்குமிடத்திலிருந்து 9:20 மணியளவில் வெளியே வருகை தந்தார்கள். மேலும் Maori சென்டர் Marae விற்கு புறப்பட்டார்கள். ஹுஸூர் அவர்கள் 10:30 மணியளவில் Maori சென்டருக்கு வந்தடைந்தார்கள். அங்கு ஹுஸூர் (அய்ய) அவர்களுக்கு அரசவை ரீதியில் வரவேற்பு வழங்கப்பட்டது. ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களின் வாகனம் Gate இல் வந்து நின்றபோது, அரசரின் சிறப்புத் தூதுவரான அரசனின் மகன் அங்கு, ஹுஸூர் அவர்களை உள்ளே வரும்படி அழைப்பு விடுத்தார். Gate ற்குள் நுழைந்த உடனேயே Maori நாகரீகத்தின் அடிப்படையில் 3 இராணுவ வீரர்கள் தமது பாரம்பரிய ஆயுதங்களுடன் முன்னால் வந்தார்கள். போர் வடிவில் தமது மரபிற்கேற்ப இந்த கருத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது நீங்கள் அமைதிக்காக வந்துள்ளீர்களா? அல்லது போருக்காக வந்துள்ளீர்களா?

அன்னார் அமைதிக்காக வருகை தந்துள்ளார்கள் என்ற விஷயத்தில் 3 இளைஞர்களும் திருப்தி கொண்டபோது ஓர் இளைஞன் ஒரு கத்தியைப் போன்ற செதுக்கப்பட்ட மரக்கட்டையின் துண்டுகளை அடையாளமாக ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டார். நீங்கள் அமைதிக்காக வருகை தந்துள்ளீர்கள் என்றால் நாங்கள் எமது ஆயுதத்தை ஒப்படைத்து விடுகின்றோம். அந்த ஆயுதத்தை வலக்கரத்தால் எடுத்துக் கொள்ளவது நாங்கள் அமைதியையும், நட்பையும் விரும்புகின்றோம் என்பதன் அடையாளமாகும். எனவே அஹ்மதிய்யா ஜமாஅத் நியூஸிலாந்தின் சதர் சாஹிப் அவர்கள் அந்த மரக்கட்டையிலான ஆயுதத்தை வலக்கரத்தால் எடுத்துக் கொண்ட பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்களின் வலக்கரத்தில் ஒப்படைத்து விட்டார்கள்.

இதன் பிறகு மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் ஹுஸூர் (அய்ய) அவர்கள் Marae விற்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஹுஸூர் (அய்ய) அவர்களின் வருகையின்போது Maori சமுதாயத்தின் சிறுவர்களும், சிறுமிகளும் தங்களது Maori மொழியில் வரவேற்கும் விதமாக குழுப்பாடலை பாடி நல்வரவு என்று கூறினார்கள். பொதுவாக அரசர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது கிடையாது. ஏனைய Maori தலைவர்களே விருந்தினர்களை வரவேற்பார்கள். ஆனால் இன்று ஹுஸூர் அவர்களின் வரவேற்பிற்காக நடத்தப்பட்ட அந்த நிகழ்ச்சியில் அரசர் தனது ராணியுடன் கலந்து கொண்டார். மேலும் ஹுஸூர் (அய்ய) அவர்களும், ஹஸ்ரத் பேகம் சாஹிபா அவர்களும் புனிதமாக இடமாக கருதப்பட்ட அந்த இடத்தில் அமர்த்தப்பட்டார்கள். அரசர் அந்த இடத்தில் அமர்ந்து கொண்டு அந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி வந்தார்.

அதன் பிறகு Maori சமுதாயத்தின் தலைவர்கள் தமது வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது சொற்பொழிவில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் Marae வின் வருகையை வரவேற்று மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். மேலும் ஹுஸூர் (அய்ய) அவர்களை மிகவும் பாராட்டி பேசினார்கள்.

(தொடரும்.....)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad